

# ரமணோதயம்

ஏப்ரல் 2015
காலாண்டு

ஆராதனை இதழ்
விலை ₹ 20


மன்மத ஆண்டு
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
SRIPAD STEELS PVT. LTD.,
Chennai

உதயம் 14 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஆராதனை இதழ்

ஏப்ரல் 2015

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2015


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ஔவையும் அண்ணலும் | சு. பரமேஸ்வரன் | 17 |
| 3 | நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை | Dr.ஏ.வி.ராஜகோபாலன் | 29 |
| 4 | இணையற்ற பகவான் | Dr. K. சுப்ரஹ்மண்யன் | 39 |
| 4 | உள்பாதை | புனிதவதி | 46 |
| 5 | நிலைமையும் நிலையாமையும் - பகவான் உபதேசம் | வஸந்தா ராகவன் | 49 |
| 6 | காலம் | ஸ்ரீநொச்சூர் வேங்கடராமன் | 53 |
| 7 | பகவானின் நினைவுடன் வாழ் | ரமண ராஜசேகர் | 54 |
| 8 | ரமண தூதர் முருகனார் | பிர. கிரிதர ஜெகதீஷ் | 55 |
| 9 | ரிபுகீதை | தியாகராஜன் | 62 |
| 10 | பகவான் ரமணர் கண்ட தமிழ் வேதாந்த நூல்கள் | | 69 |
| 11 | செய்திகள் | | 73 |


முன் அட்டை: ஸ்ரீ பகவான் தங்கி, தரிசனமளித்த பழைய ஹால்

பின் அட்டை: ஸ்ரீ மாத்ருபூதேஸ்வரர் கர்பகிருஹம்

# ஆசிரியர் உரை

## அச்சாணி ஆகும் அருள்

பகவான் என்னும் பற்றுக்கோடைப் பற்றி, சென்ற இதழில் கண்டோம். ஆசைகளும், புலன்களும் உயிர்களைப் பிறவிக்கடலில் ஆழ்த்தி மனக் கலக்கத்தையும் துன்பத்தையும் அளிக்கின்றன. அதனால் மனிதனுக்கு உயிர், உடைமை பறிக்கப்படுவது குறித்து அச்சம் உண்டாகிறது. அருளால் அந்த அச்சங்கள் நீங்கும்போது, இறை அனுபவம் முகிழ்கின்றது. அந்த அருளநுபவம் பெற்றார்க்கு இந்த உடம்போடு வாழ்ந்தாலும் அச்சம் இருப்பதில்லை. மற்ற எல்லாப் பற்றுக்களையும் விட்டு, பற்றுக்கோடாகிய பகவானைப் பற்றிக் கொண்டால் இந்த உடம்புடனே வாழ்ந்தாலும் அடியார்க்குக் கவலை உண்டாவதில்லை. இனி நமக்கு விடுதலை கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பும் இல்லை. மரணம் வருமோ என்ற துக்கமும் அச்சமும் இல்லை என்ற பெருமித நிலையே அவர் நிலை.

*சந்ததமும் வேதமொழி யாதுஒன்று பற்றின்அது*
*தான்வந்து முற்றும்எனலால்*
*சகம்மீது இருந்தாலும் மரணம்உண்டு என்பது*
*சதாநிஷ்டர் நினைவதில்லை* (தாயுமானவர்)

“பகவான் உரைத்த வேதமொழியாகிய, ‘நான் யார்’ என்பதை விசாரத்தால் அறிக” என்பதை விடாது பற்றினால் ஆத்ம சாட்சாத்காரம் தானே வந்து அடையும் என்பது உண்மை. அந்த நிலையில் இந்த உலகில் தொடர்ந்து வாழ்ந்திருந்தாலும், மரணம் என்பதை எண்ணி சதா இந்த ‘நான் யார்’ நிஷ்டை பயின்றவர் அஞ்சுவதில்லை. அவர்களது நினைப்பும் மனமும்

இந்த விசாரணையினால் அழிந்து விடுகின்றன என்பது தாயுமானவர் வாக்கு.

பகவான் இல்லாத இடமே இல்லை. ஆயினும் பலர் ஏன் அதை உணர்வதில்லை? மழை நீண்ட நேரம் பல இடங்களில் பொழிந்தாலும், அது மேடான பாறை நிலத்தில் தங்கி நிற்பதில்லை. ஆனால் பள்ளத்தில் மழைத் தண்ணீர் தேங்கி நிற்கும். பகவான் அருள் மழை எப்போதும் எல்லாவிடத்திலும் பொழிந்து கொண்டே இருந்தாலும் அவ்வருள் மழையால் ஈரமடையாத பாறைகளாகப் பல உள்ளங்கள் உள்ளன. அதேசமயம் மழையைத் தேக்கிக் கொள்ளும் பள்ளங்களாக அடியார் உள்ளங்கள் உள்ளன. ஒப்புயர்வற்ற அவர்களது எளிய, மற்றும் அடக்கம் பொருந்திய உள்ளமாகிய பள்ளத்தில் பகவான் அருள் தேங்குகிறது. அந்த அருட்பொழிவினால் அவர்தம் உலகக் காட்சியே மாறிவிடுகிறது. இதற்குமுன்வரை தங்களது அறிவின் துணைகொண்டே உலகப் பொருள்களைக் கண்டறிந்தனர். அதனால் மெய்க் காட்சி கிடைப்பதில்லை.

அருளால் எவையும் பார் என்றான் - அத்தை
அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்டதல்லால் - கண்ட
என்னையும் கண்டிலேன் என்னேடி தோழி

என்கிறார் தாயுமானவர்.

ஆனால் பகவான் அருள் வந்து அவர்தம் உள்ளத்தில் பதிந்த பின்னர் அவர்தம் தன்னியக்கம் தானாகவே நின்று விடுகிறது. தமக்கென்று ஒரு செயல் உடையவராகவே தம்மை அவர் எண்ணுவதில்லை. அவர் உள்ளத்தே இடம் பெற்றுள்ள பகவானே எல்லாச் செயல்கட்கும் மூலகர்த்தா, இத்தகைய அடியார் உள்ளமே நேரான உள்ளம். இதுவரை இருந்த காமம், குரோதம், மோகம் போன்ற கோணல்கள் அருள் பொழிவினால்

*சரியாகின்றன. பகவான் அக்ஷரமணமாலையில் கூறுவதுபோல், "தேடாதுற்ற அந்த திருவருள் நிதி" அவர் மனத்து இயக்கத்தை அழித்து விடுகிறது. கோணால் நீங்கி உள்ளம் நேராகிறது.*

*பித்துவிட்டு உனைநேர் பித்தனாக் கினைஅருள்*
*பித்தம் தெளிமருந்து அருணாசலா*

*என்று பாடுகிறார் பகவான். "குருதேவா! உனது அருளால் என்னை இதுகாறும் பற்றியிருந்த பற்றுகள், ஆசைகள் போன்ற பித்துக்கள் அனைத்தும் நீங்கி விட்டன. இதுவரை கோணலாய் இருந்த என் மனம் நேராகி, அதில் உன்னை அடைய வேண்டும் என்ற ஆசை நிரம்பியது. இந்த ஆசை, நேரான ஆசையாய் இருந்தாலும், அதுவும் ஆசைதானே! எனவே அந்த ஆசையும்கூட நீங்கி, நான் நீயாகவே ஆக மருந்தினைத் தந்தருள்வாய்" என வேண்டுகிறார் பகவான்.*

*கோணல் நில்லாத குணத்து அடியார் மனத்து*
*ஆணியன்ஆகி அமர்ந்து நின்றானே! (திருமந்திரம், 29)*

*என்கிறார் திருமூலர். "குற்றங்களாகிய கோணல்கள் இல்லாத குணசீலர்கள் மனத்தில் அச்சாணிபோல எழுந்தருளி நிலையாய் நிற்பவனே" என்பது இதன் பொருள். தேர் உருள்வதற்கு அடிப்படையாக ஆணி இருப்பதுபோல், அடியார் தம் வாழ்க்கைக்கு ஆதாரமாக பகவான் உள்ளார். அந்த மனமே சிங்காதனமாக இருந்து பகவான் அருளாட்சி புரிவார். அவர் அருள் பொழிதலின்முன் கோணலாய் இருந்த மனம் நிமிர்ந்து நேராகிறது. அங்கே பகவான் அமர்ந்து இணைந்து அடியார்கட்கு வழிகாட்டியாகவும், பற்றுக்கோடாகவும் அருள்புரிகிறார். "முதற் கோணலாகிய 'உடல்-உள்ளமே நான்' என்பதை முதலில் சரி செய்யுங்கள்" என்கிறார் பகவான்.*

*விரைவில் பகவானது 136ஆவது ஜயந்தி விழாகை கொண்டாட இருக்கிறோம். 1912ஆம்*

ஆண்டு விரூபாக்ஷ குகையில் பகவான் தங்கி இருந்தபோது அன்பர்கள் பகவானின் பிறந்த நாளைக் கொண்டாட விரும்பினார்கள். பகவானோ அதற்குச் சம்மதிக்கவில்லை. “ஆத்மாநுபவம் கனிந்து ஜொலிக்கும் தாங்கள் எங்கட்கு வழிகாட்டவே திருமேனி எடுத்துப் பிறந்துள்ளீர்கள். அந்த ஜயந்தி விழாவை நாங்கள் கொண்டாடக் கூடாதா?” என்று அன்பர்கள் இறைஞ்சினார்கள். அதற்கு விடையாக பகவான் தமது புகழ்பெற்ற இரு வெண்பாக்களைக் கூறினார்.

*பிறந்தநாள் ஏதோ பெருவிழாச் செய்வீர்!*
*பிறந்தது எவண்நாம் என்று பேணிப் - பிறந்திறத்தல்*
*இன்றுஎன்றும் ஒன்றாய் இலங்குபொருளில் பிறந்த*
*அன்றே பிறந்த நாளாம்.*

இதன் பொருள்: பிறந்த நாளைப் பெரிய விழாவாகக் கொண்டாடும் அன்பர்களே! நமது அநித்ய தேகத்தை ‘நாம்’ என்று கருதும் அஞ்ஞானம் எங்கிருந்து பிறந்தது என்று ஆத்ம விசாரம் செய்து பிறப்பு இறப்பினைக் கடந்து ஆத்மாவில் ஒன்றுவீர்கள். அதுவே உண்மையான பிறந்த நாளாம்.

இதனைக் கூறிய பின்னரும் அன்பர்கள் பிடிவாதமாக இருந்தனர். எனவே பகவான் தனது அடுத்த பாடலில் இந்தக் கருத்தை மேலும் அழுத்தமாகக் கூறினார்.

*பிறந்த நாளேனும் பிறப்புக்கு அழாது*
*பிறந்த நாள் உற்சவமே பேண - இறந்த*
*பிணத்திற்கு அலங்கரிக்கும் பெட்பு என்றதன்னை*
*உணர்ந்து ஒடுங்கல் தானேஉணர்வு.*

உடலையே ‘தான்’ என்று எண்ணிக் கொள்ளும் அவிவேகத்தின் தலைமீது ஓங்கி அடிக்கும் இப்பாடலின் பொருள்:

தினந்தோறும் நாம் இங்ஙனம் இவ்வுலகில் பிறப்பு எடுத்து உழல்கிறோமே என்று வருத்தப்பட

வேண்டும். இந்த சித் சடங்கிரந்தியை விடுவிக்க முயல வேண்டும். அப்படி தினந்தோறும் எண்ணாவிட்டாலும், குறைந்தபட்சம் பிறந்த நாள் அன்றைக்காவது ஒருவன் தான் உடலெடுத்துப் பிறந்ததற்காக வருந்த வேண்டும். அப்படியில்லாமல் பிறந்த நாளைக் கொண்டாடுவது பிணத்திற்கு ஆடை அலங்காரம் செய்து மகிழ்தல் போலும். இதை நன்கு அறிந்து உனது ஆத்மாவில் ஒடுங்கி இருப்பாய்! இதுதான் நல்லறிவு.

ஆத்ம ஞானத்தின் சிகரத்தில் இருந்து பகவான் பிறப்பினைக் குறித்து நமக்காகத் தெரிவித்த அறிவுரை இது. ஆயினும் பகவானின் திரு அவதாரம் நம் பிறப்பைப் போன்றதல்ல. எல்லையற்ற பரம்பொருள் நமக்கு வழிகாட்டியாக தன்னை ஓர் பௌதிக உருவத்திற்கு உட்படுத்திக் கொண்டு, இப்புவிக்கு வந்து பிறக்கிறது.

வானின்று இழிந்து வரம்பு இகந்த
மாபூதத்தின் வைப்பு

என்று கம்பன் அவதார மகிமையை விளக்குகிறான். காட்டில் வாழும் மானைப் பிடிப்பதற்காக பழகிய மான் ஒன்றை அந்த மான் கூட்டத்தின் நடுவே விடுவார்களாம். தங்களைப் போன்ற உருவம் கொண்ட பழகிய மானைக் கண்ட காட்டு மான்கள் அந்த மானின்மீது அச்சமோ, ஐயமோ கொள்ளாது அதனுடன் பழகும்போது, அந்தக் காட்டு மான்கள் பிடிபடுகின்றன. அதேபோன்றே, உருவம் கடந்த பரம்பொருளை நாம் அறிய இயலாது. அணுகவும் இயலாது. எனவே நம்மை வழிப்படுத்துவதற்காக, அந்தப் பரம்பொருள் நமது சத் குருவின் வடிவம் தாங்கி சாமான்ய மானுடன் போன்று நம்மிடையே பிறவி எடுத்து வருகிறது. மானுட உருவம் தாங்கிய அந்த சத்குருவை நாம் அச்சமின்றி நெருங்கும்போது அதன் ஆத்மீக சக்தியால் ஈர்க்கப்பட்டு நாம் உய்கிறோம். இதனையே “மான் காட்டி மான் பிடிப்பார் போன்று” என்று இறைவன் சத்குருவின் தூய

உடலம் தாங்கி அடியாரை வழிநடத்த இவ்வுலகில் வருவதை தாயுமானவர் பாடுகிறார்.

பகவானது உபதேசம், "ஆத்மா அழிவற்றது. விசார வழியில் அதை உணரலாம்" என்பதை மையமாகக் கொண்டது. எல்லோரும் அஞ்சுவது இறப்பைக் குறித்தே. பகவானிடம் ஓரன்பர், "சாவைப் பற்றி ஏன் விசனிக்க வேண்டும்? தினம் தினம் தூக்கத்தில் நமது அனுபவம் என்ன? அதுபோன்றே இறப்பும்" என்றார். அன்பர், "தூக்கம் தற்காலிகமானது, இறப்பு அப்படியில்லையே" என்று வினவியபோது, பகவான், "இரு விழிப்பு நிலைகட்கும் இடையே இருப்பது தூக்கம். அவ்வாறே இரு பிறப்புகட்கு இடையே நிகழ்வது இறப்பு. இரண்டும் தற்காலிகமே. அநித்யமே. இறப்பைக் கண்டு அஞ்சும் தன் முனைப்பு எங்கிருந்து பிறக்கிறது என்பதை அறிந்தால் இறப்பற்ற நித்யத்தை அடையலாம்" என்று அருளினார்.

பகவானது ஒவ்வொரு உபதேசமும் இதை உணர்த்துவதாகவே அமைந்தது. ஒரு சமயம் சோமசுந்தர சுவாமி என்ற அடியார் பகவானிடம் நோட்டுப் புத்தகத்தில் 'ஓர் அக்ஷரம்' எழுதித் தருமாறு வேண்டினார். உடனே நம் துறவி வேந்தர், 'அக்ஷரம்' என்பதனையே பொருளாகக்கொண்டு ஒரு அழகிய கவிதையை எழுதித் தந்தார்.

அக்கரம் ஓர் எழுத்தாகும் இப்புத்தகத்தோர்
அக்கரம் அப்தெழுத வாசித்தாய் - அக்கரமாம்
ஓர் எழுத்து என்றும் தானாய் உள்ளத்து ஒளிர்வதாம்
ஆரெழுத வல்லார் அதை.

அக்ஷரம் என்பதை சிலேடையாக இரண்டு அர்த்தம் – எழுத்து மற்றும் அழியாதது – கொண்டு இப்பா அருளினார் பகவான். இதன்பொருள்: "நீ வாசிப்பதற்காக இப்புத்தகத்தில் நான் ஓர் அக்ஷரம் எழுதித் தருகிறேன். ஆனால் இதயத்தில் எப்போதும் பிரகாசித்துக்கொண்டு

இருக்கும் அந்த அக்ஷரத்தை (அழியாத ஆத்மாவை) யார் எழுதிக் காட்ட முடியும்?”

மற்றொரு சமயம் ஒரு குஜராத்தி அன்பர் தனது நோட்டுப் புத்தகத்தில் பகவானின் பெயரை எழுதித் தருமாறு கேட்டபோது, “எனக்குப் பெயர் என்பதே இல்லையே” என்றார். அன்பர், வியப்புடன் ‘உங்கள் பெயர் ரமண மகரிஷி அல்லவா?’ என்று கேட்டபோது, “யாரோ அப்படிச் சொன்னார்கள். அவ்வளவுதான்? எனக்கு ஏது பெயர்” என்றார். நாமரூபம் அனைத்தையும் கடந்த அந்தப் பரப் பிரம்மமே, நம் பொருட்டு தூய தேகம் தாங்கி வந்த பேரருளை பகவானே குறிப்பாக உணர்த்துகிறார்.

ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ

என்று திருவாசகத்தில் மணிவாசகர் பாடுவதை இது நினைவூட்டுகிறது அல்லவா? காலம், தேசம், ரூபம், நாமம் அனைத்தும் அநித்யமே. ஆத்மா ஒன்றே நித்யம் என்று ஒவ்வொரு நிகழ்விலும் வலியுறுத்துகிறார் பகவான். பூஜை, வழிபாடு போன்ற புறச் சடங்குகள் அனைத்தும்கூட அநித்யத்தைச் சார்ந்தவையே என்பது அவரது உபதேசம். சண்முகம் என்னும் அன்பர் எப்போதும் ஆச்ரமம் வரும்போது தனது தந்தை தரும் கைச்செலவிலிருந்து சாம்பிராணி வாங்கிவந்து பகவான் சந்நிதியில் அர்ப்பணிப்பார். ஒருமுறை தந்தை கைச் செலவிற்குப் பணம் தராததால், ‘சாம்பிராணி வாங்காமல் எப்படிச் செல்வது’ என்று எண்ணி, அவர் பகவானைக் காண வரவில்லை. மறுநாள் அவரைக் கண்ட பகவான், “சாம்பிராணி வாங்கவில்லை என்று ஏன் நேற்று வராமல் இருந்தாய்? உள்ளத்தில் உறையும் பக்தி ஒன்றே போதும். சாம்பிராணி போன்ற புறச் சடங்குகள் தேவையற்றவை. அவை நிலையற்றவை” என்று எடுத்தியம்பினார்.

அதேசமயம் நிலையாமை தத்துவத்தை சரிவரப் புரிந்து கொள்ளாதவர்கள் “உலகம் அநித்யம்! இதை நான் விட்டு விடுகிறேன்,” என்று கூறும்போது, அவர்கட்கு பகவான் மெய்த் தத்துவத்தை சிறப்புற விளக்குவார். ஓர் அன்பர், “இந்த உத்யோகம் சாதனை புரியத் தடையாக உள்ளது. எனவே அதனை விட்டு விடுகிறேன்” என்று கூறியபோது பகவான், “உனது உத்தியோகமோ, உலகமோ உனக்கு அநித்யமாக இல்லை. அவை உன்னுடன் உன் மனத்திலேயே உள்ளன. அவற்றை விட்டு விட்டு எப்படிப் போவது? எங்கே போவது? இந்த உலகமும் பொருட்களும் மனதின் நிழல் போன்றவையே!” என்று கூறி அதை விளக்க ஒரு கதையையும் கூறினார்.

“ஓர் ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவன் தன் நிழல் தன்னுடன் வருவதை வெறுத்தான். அதைக் குழி தோண்டிப் புதைக்க முடிவு செய்தான். உடனே ஒரு பெரிய குழி தோண்டினான். அதன் அடியாழத்தில் எட்டிப் பார்த்தான். தன் நிழல் அக்குழியின் அடியில் தெரிவதைக் கண்டான். ‘அப்பாடா! நிழல் குழியின் அடியில் போய்விட்டது. இப்போது அதை மண்போட்டு மூடி விடுகிறேன்’ என்று எண்ணி வேகமாக மண்ணைத் தள்ளிக் குழியை மூடிவிட்டுப் பார்த்தால் மூடிய குழியின்மேல் அவன் நிழல் மீண்டும் தெரிகிறது. அதேபோன்று இந்த நிலையற்ற உலகமும், அதைத் தொடர்ந்த எண்ணங்களும், நீ உனது உண்மை ஸ்வரூபத்தை அறியும்வரை விடாமல் தொடரும். அவற்றைத் துறந்து ஓடுவதைவிட நித்யமான ஆன்மாவை விசாரித்து அறிந்து அதில் ஒடுங்கினால், அக்கணமே நிலையற்ற ஆசைகளும், வாசனைகளும் அனைத்தும் தாமே உள் மனத்திலிருந்து மறையும். ஏனெனில் அவை உனது ஆணவம் உருவாக்கிய தோற்றங்களே” என்றார் பகவான்.



தனது உடலுக்குக் கொடூரமான புற்றுநோய் வந்தபோதும் பகவான் அதைச் சிறிதும் பொருட் படுத்தவில்லை. 'எனது உடலில் தோன்றிய சிவலிங்கம்' என்று புற்றுநோய்க் கட்டியைப் பற்றி நகைச்சுவையாகக் கூறினார். சம்ஸ்கிருத மொழியில் இருந்த திரிசூலபுர மாஹாத்மியத்தைத் தமிழில் மொழிபெயர்த்த விசுவநாதசுவாமி, பகவானிடன் அதைக் காட்ட விரும்பினாலும் பகவான் நோயுற்றிருந்ததால் அவரைத் தொல்லை செய்யக் கூடாது என்று நினைத்து அதைக் காட்டாமலேயே இருந்தார். பகவானோ விடவில்லை. அடுத்தமுறை விசுவநாதசுவாமியைக் காணும்போது, "என்ன! மொழிபெயர்ப்பு முடிந்து விட்டதா?" என்று வினவினார். "ஆம்!" என்ற விசுவநாதர், "எனினும் அதை இப்போது பகவானிடம் கொடுத்துத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று கொண்டு வரவில்லை" என்றார்.

அதற்குப் பகவான் கூறிய பதில்தான் வேதாந்தத்தின் சாரம்! "ஓ! அப்படியா! உடலுக்கு நோய் வந்தால்

எனக்கு என்ன வந்துவிட்டது? உடல் நானா? உடல் நோயை நன்றாக அனுபவிக்கட்டும். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நாம் சும்மாதான் இருக்கிறேன். மொழிபெயர்ப்பைக் கொண்டு வாரும்!" என்றார்.

வேறுவழியின்றி விசுவநாதர் மொழிபெயர்ப்பைக் கொணர்ந்தார். அதைப் படிக்க ஆரம்பித்த பகவான் இரவிலும் மேஜை விளக்கில் அதைப் படித்து, திருத்தங்களைச் செய்து முடித்தார். நோயுற்ற தமது உடலுக்கும், தனக்கும் எந்தஒரு தொடர்பும் இல்லாததுபோல் செயல்பட்ட பகவான் வேதாந்தத்தையே வாழ்ந்து காட்டினார் அல்லவா?

பற்றற்ற நிலையின் சிகரம் பகவான். எதுவுமே அவரைப் பாதித்ததில்லை. தான் பெருமதிப்பு கொண்டிருந்த காவ்யகண்டர் நிரந்தரமாக ஆச்ரமத்தை விட்டு நீங்கி சிர்ஸிக்குப் புறப்பட்டபோதும் "ஏன் போகின்றீர்கள்?" என்று கேட்டதில்லை. ஆஸ்தான கவியான முருகனார் மற்றையோர்போல் ஆச்ரமத்தில் உணவுகொள்ளாமல் ஊருக்குள் பிட்சை எடுக்கப் போகும்போதுகூட "ஆச்ரமத்திலேயே சாப்பிடலாமே! பிக்ஷை எடுக்க வேண்டாமே!" என்று தடுத்ததில்லை. ஆச்ரமத்தில் ஆதியில் முக்கிய அங்கமாக விளங்கிய தண்டபாணி சுவாமிகள் சில ஊர்ப் பெரியவர்களால் ஆச்ரமத்தை விட்டு வெளியேற்றப்பட்ட நிகழ்ச்சி பகவான் முன்னிலையிலேயே நிகழ்ந்தது. இதைப் பகவான் சாட்சி மாத்திரமாகவே பார்த்துக்கொண்டு இருந்தார். அவர் விடைபெற வந்தபோதும் சலனம் இன்றி இருந்தார். அதைப்போல் சின்னசுவாமியை சிலர் தூக்கிச் சென்றபோதும் சரி, மாலையில் சின்னசுவாமி பத்திரமாக திரும்பி வந்தபோதும் சரி, எந்த உணர்வு வெளிப்பாடும் இன்றி "சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை" போல் சலனமற்று வீற்றிருந்தார்.

*(சின்ன சுவாமியைக் காத்ததும் பகவானின் திருவருளே என்பதையும் வெளிப்படுத்தவில்லை அவர்).*

*இங்ஙனம் அருணாசலகிரியாய் அசைவற்று இருந்த பகவான் அதேசமயம் அருள் நிறைவான அமுதக் கடலாய் அருள் அலைகள் வீசியும் இருந்தார். முருகனார் பிக்ஷை எடுக்கும்போது தடுக்காத பகவான், ஆச்ரமத்தில் அவியல் போன்ற சிறப்பு சமையல் செய்யும்போது, "பாவம். முருகனாருக்கு யார் இவற்றையெல்லாம் கொடுப்பார்கள்? அவர் பிக்ஷை எடுக்கச் சென்று விட்டாரே!" என்பார். அதைச் செவிமடுத்த அன்பர்கள் முருகனாருக்காக ஒரு பகுதியை எடுத்து வைப்பார்கள். எச்சம்மாவின் வளர்ப்புப் பெண், பாட்டி உபவாசம் இருக்கச் சொல்லியதைக் கூறியபோது, "சாதுக்கள் சங்கத்தில் இருக்கும்போது இந்த உபவாசங்கள் எதுவுமே தேவையில்லை. நீ சாப்பிடு!" என்று கூறிய அன்புத் தாயுள்ளம் அது. மரத்தில் துளிர்களைப் பறிப்பதைக் கண்டு தானே வாடிய அன்புள்ளம் அது. வைராக்கியத்தின் சிகரமான பகவான் அதேசமயம் அருள் அருவியாகவும் திகழ்ந்தார்.*

*பகவானது பெருமையை இக்கட்டுரைகள் வாயிலாக உரைக்க முற்படும்போதெல்லாம் எனக்குத் திருமூலர் திருவாக்குதான் நினைவுக்கு வருகிறது.*

*ஆர்அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை!*
*ஆர் அறிவார் இந்த அகலமும் நீளமும்*
*பேர் அறியாத பெருஞ்சுடர் ஒன்றுஅதின்*
*வேர் அறியாமை விளம்பு கின்றேனே!*

*(திருமந்திரப் பாயிரம், 95)*

*எங்கள் பெருமானது பெருமையை யார் அறிவார்கள்? எங்கும் பரவிய அவர் விஸ்தீரணத்தை யார் அறிவார்கள்? நாம ரூபத்தை எல்லாம் கடந்த பெரிய அருட்சோதியே*

அப்பெருமான். அந்த அருட் பெருஞ்சுடரின் மூலத்தை நான் அறியாவிட்டாலும் எனது அறிவுக்கு எட்டியவரை அதைக்கூற விரும்புகிறேன். என் சொல்லுக்கும், அறிவுக்கும் அடங்கிய அளவுடைய பொருள் அன்று அது. ஆயினும் என் சிற்றறிவுக்கு எட்டியமட்டில் அந்த மகோன்னதத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன் என்று திருமூலர் பாடியது பகவானைப் பற்றிக் கூற முற்பட்டவர் அனைவருக்கும் பொருந்தும் அல்லவா? நாம் கற்கும் கல்வியின் இறுதிப் பயன் பகவானின் பெருமையை அறிந்து அவன் திருப்பாதங்களில் சரண் அடைவதல்லவா?

குறிப்பு அறிந்தேன் உடல் உயிர் அது கூடிச்
செறிப்பு அறிந்தேன் மிகு தேவர் பிரானை
மறிப்பு அறியாது வந்து உள்ளம் புகுந்தான்
கறிப்பு அறியா மிகும் கல்வி கற்றேனே.

(திருமந்திரம் முதல் தந்திரம், 13 கல்வி, 1)

"நாம் ஆத்ம விசாரம் செய்து அவனது திருவடியை அடைய வேண்டும் என்பதுதான் பகவானது திரு உள்ளக் குறிப்பு. அதற்காகவே தனது பரந்த தன்மையை குறுக்கிக்கொண்டு, இவ்வுலகில் திருஅவதாரம் செய்துள்ளான். அதன்பொருட்டே, நம் உடம்பொடு உயிரைக் கூட்டி இவ்வுலகில் உலவ விட்டுள்ளான். அவனது உபதேச மொழிகளைப் பயின்ற பின்னர் அவனே தேவர்பிரான் என்று அறிந்தேன். எனது அகங்காரம் இடைவந்து மறித்தாலும், அதை நீக்கி, எனது உள்ளத்தே அவன் வந்து புகுந்தான். நாம் கற்க வேண்டிய ஒரே கல்வி, ஆத்ம விசாரணையாகிய ஒரே கல்வியே என அவர் உபதேசித்தார். அதுவே பிறவிப்பயன் அடையச் செய்யும் வழி" என்ற திருமூலர் வாக்கு இங்கே பகவானின் அடியார்க்குப் பொருந்துகிறது அல்லவா?

இந்தப் பிரபஞ்சமே பிரளயத்தில் ஒடுங்கும்போதும் பகவான் என்றும் எப்போதும் இருந்தபடி இருக்கின்றார். சலனமே சிறிதும் அற்றவர் பகவான். அவரது அருள் பொழிவால், என் தனித்துவம் - ஜீவபோதம் - அழிந்து போய், நான் பகவானுடன் ஒன்றாய்க் கரைகின்றேன் என்று திருவாசகத்தில் விளக்கப்படும் கலையை பகவான் அருள் பிரவாகம் நமக்கு உணர்த்துகிறது.

வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர்மண் கெடினும்
தான்கெட்டல் இன்றிச் சலிப்புஅறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என்
உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ
(திருவாசகம், திருத்தெள்ளேணம்-11)

பஞ்சபூதங்களும் அவற்றால் அமைக்கப்பட்ட பிரபஞ்சமும் பிரளயத்தில் ஒடுங்கும்போது இறைவன் எப்போதுமே இருந்தபடியே இருக்கிறார். அவரிடத்தே எந்தவிதச் சலனமும் இல்லை. அந்த பகவானுடன் நான் ஒன்றும்போது என் உடல், உயிர், உணர்வு அனைத்துமே அழிந்து, 'நான்' என்ற அகங்காரமும் முழுவதுமாக எழுகின்றது என்கிறார் மணிவாசகர்.

நாம் பகவானை ஆராதனை செய்து முடிவில் கூறுகின்ற (முண்டக உபநிஷத் 3-2-6) மந்திரமும் இதனையே எடுத்து உரைக்கின்றது.

வேதாந்த விக்ஞான ஸுநிஸ்சிதார்த்தா
ஸந்யாஸ யோகாத் யதய ஸுத்த ஸத்வா:
தே ப்ரஹமலோ கேஷு: பராந்த காபே
பராம்ருதா: பரிமுச்யந்தி ஸர்வே

வேதாந்த விசாரத்தின் இறுதிக் குறிக்கோளாய் உள்ள பரமாத்மாவில் நன்கு நிலை பெற்று இருப்பவர்களே சந்நியாசி ஆவர். பற்றற்ற துறவான அவர்தம்

வாழ்க்கையினால் அவர்தம் கருவி கரணங்கள் அனைத்தும் புனிதமடைகின்றன. ஞானாக்கினியில் அவர்தம் ஜீவபோதம் அழியப்பெற்று அவர்கள் மரணமில்லாப் பெருவாழ்வினை அடைகிறார்கள் என உபநிடதம் கூறுகின்றது.

பற்றற்ற நிலையிலே பரவசமாய் வீற்றிருக்கும் பரம ஞானி பகவான், தன் உடலையேகூட தன்னிலிருந்து வேறாகக் கண்டவர். ஒருநாள் காலின் வாதப் பிடிப்புத் தொல்லைக்காக பகவான் தன் காலைத் தானே பிடித்து விட்டுக்கொண்டு இருந்தார் அருகில் இருந்த பக்தர், "பகவானே! உங்கள் கால்களைப் பிடித்து விடும் புண்ணியம் எனக்குக் கிடைக்கட்டும். நான் கால்களைப் பிடிக்கிறேனே!" என முன்வந்தார். பகவானோ, "இத்தனை நாட்கள் நீங்கள் கால்களைப் பிடித்து விட்டு நிறைய புண்ணியம் சம்பாதித்திருக்கிறீர்களே! எனக்கும்தான் அந்தப் புண்ணியம் கொஞ்சம் கிடைக்கட்டுமே" என்று சிரித்தபடி கூறினார் தன் சரீரத்திலிருந்தே விலகியிருந்த சத்குரு.

இன்னொரு நாள், எளியவர்க்கும் எளியராய் நடந்து கொள்ளும் பகவான், தன்னை மிகவும் மேலாகக் காட்டிக் கொண்டார். எப்படி என்கிறீர்களா? "ஆளானப்பட்ட ராமபிரான் காலையே வாயுவின் குமாரன்தான் (அனுமன்) பிடித்துக்கொண்டு இருக்கிறான். என் காலை அனுமானின் அப்பாவே (வாயு) பிடித்துக் கொண்டிருக்கிறார்." இங்ஙனம் தன்னையே தன் உடலிலிருந்து வேறாகக் கண்டு நகைச்சுவை பொழிவது இந்தப் பற்றற்ற பகவானுக்கே உரித்தானதல்லவா?

அப் பரமக் கடலை மீண்டும் காண்போம்.

பகவான் பணியில் தங்கள்

ராம்மோஹன்

# ஔவையும் அண்ணலும்

சு. பரமேஸ்வரன்

உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு வகையில் தனது வாழ்வில் அதிருப்திகொண்டே துயரப்படுகிறார். எப்போதும் இன்பமாய் வாழ யாராலும் முடிவதில்லை. மனித முயற்சிக்கு மீறி நடக்கும் செயல்களுக்கு, விதி, ஊழ், தலையெழுத்து எனக்கூறி, மனஅமைதி காணும் மனப்போக்கு நம்மிடையே தொன்றுதொட்டு இருந்து வருகிறது. ஊழ் என்பது வேறு, வினை என்பது வேறு. விதிவேறு, கர்மா வேறு.

ஊழ் என்பதும், விதி என்பதும் ஒரு பொருள் குறித்த இரு சொற்கள். தெய்வப் புலவர் ஊழ் குறித்து ஒரு அதிகாரமே எழுதியுள்ளார். ஊழ் அல்லது விதி என்பது ஒரு உயிர், கருவில் தோன்றியபோதே ஏற்பட்டு விடுவதாகும். ஒருவரது வயது, குணம், நிறம் யாவும் முன்பே தீர்மானிக்கப்பட்டது. ஒருவரது வாழ்வு இப்படித்தான் இருக்கும் எனக் கருவிலேயே விதிக்கப் பெற்றுள்ளது. இது முற்பிறவியில் செய்த கர்மங்களின் பயனாய் விளைவது.

*விதிமதி மூலம் விவேகம் இலார்க்கே*
*விதிமதி வெல்லும் விவாதம் - விதிமதிகட்கு*
*ஓர்முதலாம் தன்னை உணர்ந்தால், அவை தணந்தார்*
*சார்வரோ பின்னும் அவை — உள்ளது நாற்பது, 19*

மதி என்பது ஒருவனது அறிவு வன்மையைக் குறிப்பிடுவது. விதியா, மதியா எது பெரியது? விதியை, மதி வெல்லுமா? என்ற விவாதம் பயனற்றது.

விதி, மதி ஆகியவற்றிற்கு மூலமாய் ஆதாரமாய் உள்ள மனதைப் பற்றிய விவேகம் இல்லாதவர்களே

அதைப்பற்றி விவாதம் செய்வார்கள் என்பது பகவான் ரமணரின் வாக்கு. மனமே, விதி மதி வேற்றுமையைக் கற்பிக்கிறது. தன்னை உணர்ந்தவர்களிடம் சங்கற்ப, விகற்பம் அற்றபடியால், செயலின் பலன் அவரைச் சாராது. அதனால் விதி-மதி என்ற இருமை அவரைத் தீண்டாது.

வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்
அனைத்துஆய நூலகத்தும் இல்லை — நினைப்பதெனக்
கண்ணுறுவது அல்லால், கவலைப்படேல் நெஞ்சேமெய்
விண்ணுறுவார்க்கு இல்லை விதி — ஔவையார்

வினைப் பயனை, ஊழை வெல்வதற்கு உரிய உபாயம் வேதம் முதல் எந்த நூல்களிலும் இல்லை என்பதை எண்ணி வருந்தாதே, வெட்டவெளிக்குச் சென்றவர்களுக்கு பற்றற்ற நிலையினர்க்கு விதி மதி இல்லை என்பது ஔவைப் பாட்டியின் அருள் வாக்கு.

விதி, மதி என்பது இருமையிலிருந்து வருபவை யாகும். பயன் கருதி செய்யப்படும் முயற்சி பலன் தராதபோது அது விதியின் விளையாட்டு என எண்ணுகின்றோம். ஞானிகளின் பார்வையில் விதி-மதி என்பது இல்லை, அவர்தம் வாக்கு சத்தியமே. சராசரி மனிதனுக்கு விதி, மதி உண்டு. காலமும், இடமும் உண்டு. முன் விதியானது ஒருவரை நல்வழிக்கோ, தீயவழிக்கோ அதுவாக இழுத்துச் செல்வதில்லை, ஏனெனில் கர்மம் ஜடம் அவை நம் மனதில் விருப்பு-வெறுப்பு என்ற மன விருத்தியைத் தோற்றுவித்து செயல்படத் தூண்டும். ஆக விருப்பு, வெறுப்புகளை வென்றால் நாம், அவைகளின் வலையில் விழ மாட்டோம். இருமையற்ற சார்பு கெட வாழ்தல் எல்லோருக்கும் சாத்தியமா? இன்றைய வியப்பூட்டும் நவீன கண்டுபிடிப்புகள் யாவும் சிலர் மனதில் தோன்றிய சிந்தனையின் வெளிப்பாடேயாகும். மனம் எல்லோரிடமும், எப்போதும் செயல்பட்டுக் கொண்டே

இருக்கிறது. மனத்தின் துணையின்றி மனிதனுக்கு இக வாழ்வும் இல்லை பர வாழ்வுமில்லை. பந்தத்திற்கும், முக்திக்கும் மனமே காரணம். அனைத்திற்கும் காரணமான, மனத்தைப் பற்றிய ஒரு தெளிவான பார்வை நமக்குத் தேவை. அறிவியலின் துணை கொண்டு அடிப்படையான சில விஷயங்களைச் சிறிது சிந்திப்போம்.

முதலில் மனம் என்பது என்ன? அதன் இருப்பிடம் செயல்பாடு என்ன? சற்று ஆராய்வோம். பலரும் மண்டை ஓட்டிற்குள் உள்ள மூளையே மனம் என நம்புகிறார்கள். மூளையின் ஒரு பகுதி நோயுற்றால் மன இயக்கத்தில் சில செயல்கள் தடைபடும் என்பது உண்மைதான். ஒரு இசைக் கருவியின் ஒரு கம்பி அறுந்து விட்டாலோ, தளர்ந்து விட்டாலோ அதில் இசையைக் கேட்க முடியாதுதான். ஆனால் இசைக் கலைஞன் இன்றி வீணை தானாக இசைக்க முடியுமா? மூளை மனமல்ல, அது ஒரு ஜட உறுப்பு. உலகில் பல சாதனைகளைச் செய்தவர்; பண்டிதர்; பாமரன், பல மொழிகளைப் பேசுபவர்கள் என பலதரப்பட்டவர்களின் மூளைகளைப் பரிசோதித்தால், அவற்றின் அமைப்பு, நிறம், எடை, அதில் காணப்படும் நியூரோன்கள் யாவும் ஒன்றுபோலவே காணப்படும். ஒரே மாதிரியான மூளைகளைக் கொண்ட மனிதர்களின் செயல்பாடுகளில் எத்தனை, எத்தனை வேறுபாடுகளைக் காண்கிறோம்? ஆகவே மூளை மனமல்ல. மூளையின் மூலம் செயல்படும் மனம், ஜடப்பொருள் அல்ல. மிகவும் சூட்சுமமான பொருள். உடலில் எந்தப் பகுதியிலும் மனதை எந்த ஒரு பூதக் கண்ணாடி மூலமும் காண முடியாது. மனம் தொழில்படுவது மூளையிலேயே. மூளை எப்போதும், எல்லோரிடமும் உள்ளது; மனம் அங்கு நின்று செயல்படாவிடில், எண்ணம், செயல் உண்டாவதில்லை. மனதின் கிரியாஸ்தானம் மூளை. எவ்வளவு பெரிய ஜடப்

பொருளானாலும் அதை இயக்குவது ஒரு சூட்சுமப் பொருளே என்பது இயற்கை நியதி. ஒரு பெரிய ரயில் வண்டியை இயக்கும் மின்சக்தி, ரயிலின் அளவையோ பளுவையோ கொண்டிருக்கவில்லை. நீர்மூழ்கிக் கப்பல்களை இயக்குவதும் மிகவும் சூட்சுமமான அணு சக்தியே.

*மன இயக்கம்:*

மனதின் இயக்கத்தை எண்ணம் என்று சொல்கிறோம். கண் பார்க்கிறது, காது கேட்கிறது, நாவு ருசிக்கிறது. அதுபோல, மனம் எண்ணுகிறது. நினைப்பு, மறப்பு என்ன என்பதை அறிவதே ஒரு பெரிய அறிவாகும். ஐம்புலன்களின் மூலம் வெளி உலகிலிருந்து வரும், ஒலி, ஒளி முதலியவைகளின் வடிவமாக மனம், திரிந்து, பரிணமித்து நிற்பதைத்தான் நினைப்பு, எண்ணம் என்கிறோம். சப்த, ரூப, ரச, ஸ்பரிஸ கந்தங்களின் வடிவாகப் பரிணமித்து நிற்பது மனம். அனைத்திற்கும் மூலமாய் உள்ள மனம் எப்போதும் சலித்துக் கொண்டே இருக்குமன்றி அசைவற்று நிற்கும் சுபாவம் அதற்கு இல்லை. எல்லாவற்றையும் அறியும் அது, தன்னை மட்டும் அறியாது. ஐம்புலன்களும் நிகழ்கால உணர்வுகளை மட்டுமே தரவல்லது. மூன்று காலங்களையும்நினைத்துப் பார்ப்பது மனம். கண்ணுக்கும் கண்ணாய் இருப்பது மனமே தான். நினைப்பதால் மனம் எனப்படுகிறது. அறிவதால் புத்தி என்றும், நான் என்பதால் அகந்தை எனவும் அறியப்படுகிறது. மனதால் நினைக்கிறோம், என்பது என்ன? எதை நினைக்கிறோம்? கண்களால் கண்டதை, காதால் கேட்டதை, வாயால் உண்ட அறுசுவை உணவை நினைத்து, தனக்குள்ளே மீட்டு எடுத்து ஞாபகப்படுத்தலையே நினைத்தல் என்கிறோம். நாமாக நினைப்பது சங்கற்பம் என்றும், மனம் தானாக நினைப்பது விகற்பம் என அறியப்படும். நாம்

விழிப்பு நிலையில் ஆழ்ந்து அக்கறையுடன் விருப்பு, வெறுப்புடன் ஒன்றைத் தொடர்ந்து நினைத்து வந்தால் அது சித்தத்தில் பதிவாகிறது.

கர்மா, வினை என்றால் என்ன? கர்மம் என்பது செயல். மனிதன் தன் வாக்கால் மனத்தால் உடலால் செயல் புரிகிறான். ஒரு செயல் முடிந்ததும் அதன் இயக்கம் முடிந்து விடுகிறது. ஆனால் அதன் பலன் நல்லதோ-தீயதோ, வாசனா ரூபத்தில் உள்ளது. அது அழிந்து விடுவதில்லை. அது உள் மனதில் சித்தத்தில் மறைந்து நின்று சமயத்தில் நினைவுகூர்ந்து மீண்டும் செயல் புரியத் தூண்டுகிறது. பொதுவாக நம் மனம் என்பது புற மனமேயாகும். இதில் நமது எண்ணங்கள் பதிவாவதில்லை. சித்தம் எனும் ஆழ் மனம் மிகவும் வலிமையானது. அதுவே மனிதனை ஆட்டிப் படைக்கிறது எனலாம். சித்தத்தின் செயலை — மன விரித்திகளைக் கட்டுப்படுத்தலே யோகம் என்று பதஞ்சலி யோக நூல் கூறும்.

“யோக சித்தவிருத்தி நிரோத” சித்தத்தின் செயலை வென்றவர்களையே சித்தர்கள் என்கிறோம். சித்தத்தினின் தொடர்பால் பெறும் அதீத சக்திகளை “சித்து” என்கிறோம். தூல உடல் மறைந்தாலும் சித்தப்பதிவுகள் அழிவதில்லை. சித்த சமஸ்காரங்களின் எழுச்சியே பிறவிக்குக் காரணம். தாயுமானவரும் இதைத்தான்சொல்கிறார்:-

இறப்பும், பிறப்பும் பொருந்த — எனக்கு
எவ்வணம் வந்ததுஎன்று எண்ணியான் பார்க்கில்
மறப்பும் நினைப்புமாய் நின்ற — வஞ்ச
மாயா மனத்தால் வளர்ந்தது தோழி.

மனதின் வேலை இரண்டுதான். ஒன்று எப்போதும் ஒன்றை விட்டு ஒன்றை எண்ணிக்கொண்டே இருப்பது. சிந்தனையற்றபோது தூக்கத்தில் ஆழ்ந்து விடும். மனிதர்களின் புலன்களுக்கும், புற மனதிற்கும்

கட்டுப்படாமல் உடலின் உள் உறுப்புகளான இதயம், இரைப்பை, சுரப்பிகளை இயக்குவது சித்தம் எனும் ஆழ்மனமே. இது எப்போதும் இடைவிடாமல் செயல்பட்டுக் கொண்டே இருக்கும். ஒருவனது இயற்கைக் குணம், நிறம் யாவும் ஆழ்மனதில் சித்தத்தில் முன்பு பதிவானவையே. அறிவியலார் இதை D.N.A என்பர். சித்தத்தில் பதிவாகும் எண்ணங்கள், உணர்வுகள், காட்சிகள் யாவும் புறமனதிற்கு வாரமல் மறைந்தே இருக்கும். சிலருடன் பழகும்போதும், சில இடங்களில் போகும்போதும் இதற்கு முன்பே பழகியதைப்போல் எண்ணம் தோன்றும். இதற்கு முற்பிறவியின் நினைவை உள்ளடக்கியிருக்கும் சித்த மனமே காரணம். மனிதனின் நல்வினை, தீவினைக்கு ஏற்ப பிறப்பு அமைகிறது. ஊழ் எப்படிச் செயலாற்றுகிறது? ஆழ்மனத்தின் சித்த சமஸ்கார வடிவத்தில் செயல்படுகிறது. ஆக, சித்தம் என்பது ஊழின் குழந்தை.

கொடுத்துவைத்தவன்:

ஆழ்மனம் (Sub Conscious Mind) விதியாகி மனித வாழ்வோடு விளையாடுவதை எப்படி அறிவது? மிகுந்த வறுமை நிலையிலும், துன்பம் வந்தபோதும் சிலர் உலக வாழ்க்கையை வெறுத்துத் துறவியாகின்றனர்; அதே நிலையில் பலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். மற்றும் பலர் குடும்பத்தோடு பிச்சை எடுப்பதையும் பார்க்கிறோம்! ஏன் இந்த அவல நிலை? அவர்கள் சித்தத்தில் முன்பு பதிவான உணர்வினால் உந்தப்பட்டுச் செயல்படுகிறார்கள் என்பதுதானே உண்மை. இந்த நியதியைப் பாமர மக்களும் எளிதாகப் புரிந்து, செயல்பட, தனக்கே உரிய பாங்கில் தமிழ்ப் பாட்டி எடுத்துரைத்தாள்.

*செய்ததீவினை இருக்க, தெய்வத்தை நொந்தக்கால்*
*எய்த வருமோ இருநிதியம் — வையத்து*
*அறும்பாவம் என்றுஅறிந்து, அன்றுஇடார்க்கு இன்று*
*வெறும்பானை பொங்குமோ மேல் (நல்வழி: 17)*

முன்பு நாம் எதைச் செய்தோமோ, அதுதான் இப்போது அனுபவிப்பதற்கு என நாம் சேமித்து வைத்த பொருளாகும். நல்ல வசதியுடன் வளமாக, மகிழ்வாக வாழ்ந்துகொண்டு இருப்பவர்களைப் பார்த்து அவனுக்கு என்னப்பா? கொடுத்து வைத்தவன் என்போம்! அவன் யாரிடம் எப்போது? எதைக் கொடுத்து வைத்தான்; என்றால் அன்று நோயுற்றவர்களுக்கு உறுதுணையாக இருந்து உதவியவன், இன்று நோயற்ற வாழ்வில் ஆனந்த வாழ்வு வாழ்கிறான். முன்பு பசியோடு வந்தவர்களுக்கு அன்னம் பாலித்து அன்போடு உபசரித்தவன், இன்று பசியே அறியாமல் அறுசுவை உண்டு மகிழ்கிறான். அன்று மனம் கலங்கி நின்ற ஏழையின் துயர்துடைத்து, அன்புடன் பழகியவன் இன்று மனைவி, நட்பு, சுற்றம் சூழ அன்புக் கடலில் மகிழ்ந்து வாழ்கிறான். பயன் கருதாச் செயல்களுக்கு நல்ல பலன் வந்து சேரும் என்பது நான்கு மறைதீர்ப்பு.

அதேபோல் முன்பு செய்த தீவினைகளும் கொடுத்து வைத்த பொருள்தான். அவற்றையும் உரிய நேரத்தில் அனுபவித்துதான் தீர வேண்டும். அன்று ஏனைய உயிர்களை வேட்டையாடிக் கொன்றவன் ஊனமுற்றவர்களை எள்ளி நகையாடியவன் இன்று அவனுக்குப் பிறந்த குழந்தைகள் ஊனமுற்றதாய் இருப்பது கண்டு நித்தமும் வருந்தி வாழ்வான். முன்பு ஏழைகளை வருத்தியவன், அநியாய வட்டி வாங்கியவன் இன்று அவனது வீடு கடனில் மூழ்கி, கட்டிய துணியோடு வீதியில் நிற்பான். ஆகவே சுக, துக்கங்களை அனுபவிக்கவே இப்பிறவி வந்தது

என்பதை உணர வேண்டும். மேலும் அகத்திய முனி "கர்ம காண்டம் 300" என்ற நூலில் நோய்களுக்கும், மனிதன் செய்யும் செயல்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று கூறுவதுடன் அதற்கான நீண்டதொரு பட்டியலும் தருகிறார். நற்செயல்கள் செய்யவே எப்போதும் விரும்ப வேண்டும். அதுவே மனிதனின் முதற் கடமையாகும். நல்லதை எண்ணி முயற்சி செய்தும் அது நடைபெறவில்லை என்றாலும் நல்ல நினைவிற்குப் பலன் உண்டு. ஒருவன் களவு, கொலை செய்யத் திட்டமிட்டு, அது நடைபெறாமல் போனாலும் தீயதை எண்ணியதற்கும் பலன் உறுதியாக உண்டு. அதனால் அன்றோ தமிழ்ப்பாட்டியும் சொன்னாள்: "அறம்செய விரும்பு"; "ஈகை மறவேல்" என்று. தர்மத்தைச் செய் என்று ஆணையிடவில்லை. அதை உனது விருப்பமாக உன்மனதில் பதியவைத்துக் கொள் என்றாள். ரமண பாணமான "நான் யார்?" போன்று, "அறம் செயவிரும்பு" என்பது மிகநுட்பமான ஆழமான பொருள் கொண்டதாகும். உண்மையான அறிவு-விவேகம் என்பது துன்பத்தை மாற்ற உதவும் கருவி. நேற்றைய தோல்வி இன்று வெற்றிப்படிகளாக மாற வேண்டும். இவ்வாறு மாற்றுவதற்குப் பயன்படும் கருவியே அறிவு-மதி எனலாம்.

"அறிவு அற்றம் காக்கும் கருவி"
"அறிவுடையோர் ஆவது அறிவார்"

என்பன பொய்யா மொழியாரின் வாக்கு.

புராணங்களில் வரும் கற்பக விருட்சம் எது கேட்டாலும் தரும் இயல்புடையது. ஆனால் அதுவாக நமக்கு வேண்டியதை அறிந்து தராது. நீதம் எது? அநீதம் எது? என அறிந்து செயல்படவே இறைவன் நமக்கு அளித்த கொடை, பகுத்தறிவு என்னும் கற்பக விருட்சம். நல்லவை செய்யவும் விதி வேண்டும் என சிலர் பேசுவர். இது விதண்டாவாதம் மட்டுமன்று,

பொறுப்பற்ற பேச்சும் ஆகும். சாதுக்களின் சங்கத்தாலும், இறை நாமாக்களை மனம் ஒன்றி ஜபிப்பதாலும், தீய எண்ணங்களை முறைப்படுத்தி மாற்றலாம் அல்லவா?

சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை — உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

— ஔவை, திருவைந்தெழுத்தின் சிறப்பு

இறைவனின் நாமாக்களை இடைவிடாது சிந்தித்தால் வினைகள் அற்றுப் போகும் எனப் பலரும் அறிவுறுத்தினால், பல சந்தர்ப்பங்களில் அதை மறந்து, இழிவான வார்த்தைகளைப் பலரும் சொல்வது ஏனோ?! செய்த தீவினையானது இறைநினைப்பே எழாமல் செய்து விடுகிறது. வெல்லமுடியாத வெவ்வினை என்பதும் இது தான். ஆழ்ந்த நம்பிக்கையினால் மலையையும் நகர்த்தலாம். நாவுக்கரசர் 'நமசிவாய' என்ற மந்திரத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கையினால் நெருப்பு நீரானது, பாறை தெப்பமாக மாறியது. வள்ளலார் ஆண்டவர் மீது கொண்ட நம்பிக்கையினால் விளக்கு தண்ணீரிலே எரிந்தது; அகவல் பாடலும் பிறந்தது. ஔவையின் தமிழ்ப்பற்று, நம்பிக்கையின் விளைவாய் பட்டுப் போன பலா மரம் பால் பொங்கித் தழைத்தது. பட்டினத்தார் பரமனிடம் கொண்ட நம்பிக்கையால் பச்சை வாழைமட்டை பற்றி எரிந்தது.

எண்ணத்தின் வலிமையே நம்பிக்கை. மந்திரமும், மருந்தும், குருமொழியும் நம்பின பேர்க்கே பலன் தரும் என்று கூறவும் வேண்டுமா?

முன்னோர்களது மொழிகள் பொன்போல் போற்றப் படவேண்டும். "எண்ணம்போல் வாழ்வு" என்ற முது மொழிகள் நம் நெஞ்சுக் கூட்டில் பதிய வேண்டும்.

மின் சக்தி, காந்த சக்தி, அணு சக்தி இவையெல்லாம் தோற்றுவித்தது எது? மனிதனின் மனோ சக்தி.

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும் — திருக்குறள், 265

ஆகவே அல்லவை நீக்கி தவம் செய்ய முயலவேண்டும். சவத்தை எரிக்க மயானம் உள்ளது போல், நம் எண்ணங்களை — சித்தப்பதிவுகளை எரிக்க தியானம் எல்லோருக்கும் வலியுறுத்தப்பட்டது. தவம் என்பது தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறி.

அதைவிட்டு, மனம் வேறுவழியில் சென்றால் செய்த தவத்தின் வலிமை — பலன் குன்றிவிடும்

செய்தவம் மறந்தால் கைதவம் மாளும்
சிவத்தைபேணில் தவத்திற்கு அழகு
— கொன்றை வேந்தன்

இனியது எது?

அறிவுள்ளோரை ஞானிகளைக் கனவிலும்
நனவிலுங் காண்பது தான் — (நினைப்பது)

அரியது எது?

தானமும், தவமும் தாம் செயல் அரிது
தானமும், தவமும் தாஞ்செய்வாராயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே

தானம் செய்யப் பொருள் இல்லையே என ஏங்க வேண்டாம். இரக்கக் குணம் இருந்தால் இறையருளும் தானே வரும்.

ரமணருக்கும், ஔவைப் பிராட்டிக்கும் இடையே மிகப் பெரிய ஒற்றுமை உண்டு. ஞானம் பெற்று 54 ஆண்டுகள் ரமணர் எளிமையாக, தூய்மையாக மக்களோடு மக்களாய் வாழ்ந்தார். அரசர், ஆண்டி, பண்டிதர் என யாவரும் அவரை நாடியே வந்து அருள் பெற்றனர். அவரது சந்நிதானத்தில் எல்லோரும் ஓர்

இனம், ஓர் குலம். அவரது அன்பு, அருள், மனித எல்லைகளைக் கடந்தது. சகல உயிர்களையும் சம நோக்குடன் நேசித்தார். யாரிடமும் எந்த உதவியையும் ஏற்காது வாழ்ந்து காட்டிய மகேசன் ஆவார். ஔவைப் பாட்டியின் சரிதம் அவரது பாடல்களில் உள்ள நுட்பம், நகைச்சுவைகளை அவ்வப்போது பக்தர்களிடம் கூறி மகிழ்வார்.

ரமணபகவானின் அனுபூதிப் பாடலான 'அருணாசல அட்சரமண மாலை' யில் ஒரு கண்ணியில்

ஔவைபோல் எனக்கு உன் அருளைத் தந்தெனை
ஆளுவது உன்கடன் அருணாசலா

என்றார்.

### ஔவை பெற்ற இறையருள்தான் என்ன?

சுந்தரமூர்த்தி நாயனார்க்கு முன்பே ஔவையை வேழ முகத்தோன் தம் துதிக்கையால் ஏந்திக் கயிலாயம் கொண்டு விட்டதும், முருகப் பெருமான் அவருக்குத் தரிசனம் தந்து வித்யா கர்வத்தை வென்ற வரலாறுகளும் யாவரும் அறிந்ததே.

ஔவை எந்த அரச சபையிலும் வீற்றிருக்கவில்லை. ஆனால் மூவேந்தர்களும் அவளைத் தேடியே வந்தனர். சிற்றரசர்களிடையே சமாதானம் வேண்டி அரசியல் தூதுவராக சென்றார். உலகிலேயே குழந்தைகளுக்காக அறநூலை எழுதி, அந்தப் பிஞ்சு உள்ளங்களில் பக்தி, ஈகை போன்ற நல்வித்துகளை ஊன்றி, வளர்வதற்காக ஊர் தோறும் சென்றது தமிழ்ப் பாட்டி மட்டுமே என்றால் மிகையாகாது. பிற சமயக் காழ்ப்பு இல்லாதவர். நல்ல சமுதாயம் மலர வேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்ட ஔவை பெரும் ஞானியே.

மெய்ஞ்ஞானம் உணர்வதற்கு முன்பு நமக்கு ஏற்படும் மனக் குழப்பத்தைத் தெளிவாகவே

ஔவை வெளிபடுத்தியுள்ளார். இறைவனின் செயல் எது? நம்மால் செய்யக் கூடியது எது? என்பதில் பண்டிதர்களின் மத்தியில் இன்றுவரை ஒரு நிலையான கருத்து உருவாகவில்லையெனில் சாதாரண பாமரர்களால் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? விதியைப் பற்றியும், அதை வெல்லும் உபாயத்தையும் எளிய நடையில் கூறிய ஔவைப் பாட்டிக்கும், பகவான் ரமணருக்கும் எவ்வாறு நன்றி செலுத்துவது?! அவர்களது ஆன்மிக உபதேசத்தை மனதளவில் ஏற்று, கூடிய மட்டும், விடா முயற்சியுடன் செயலில் போற்றி நடப்பதும், எப்போதும் அவர்களைப் பக்தியுடன் நன்றியுடன் நினைத்து வாழ்வதே தெய்வீக வாழ்கையாகும்.

காகம் ஆனது கோடி கூடி நின்றாலும் ஒரு கல்லின் முன்
எதிர் நிற்குமோ?
கர்மம் ஆனது கோடி முன்னே செய்தாலும் ரமணா நின்
கருணைப்ரவாக அருளைத் தாகமாய்
நாடினவரை வாதிக்க வல்லதோ?”

ஆம். இதுவே விதியை வெல்லும் மதி எனலாம்.

அருளே உருவாகி வந்த ஐயன் பாதம் வாழ்கவே
வேண்டல், வெறுத்தல் இரண்டுமில்லா விமலன் பாதம்
வாழ்கவே

---

# ரமணோதயம்

## Voluntary Services


K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

வஸந்தா ராகவன் 9445432335

# நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை

**Dr. ஏ.வி. ராஜகோபாலன்**

## பகுதி 21

*ரமண பகவான் உலகத்தின் முன் வைத்த முதன்மைத் தத்துவம் 'நான் யார்?' என்ற கேள்விதான். இந்தக் கேள்விக்கு இதுதான் விடை என்று அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பார்க்கப் போனால், இந்தக் கேள்வி எழும்போதே அதற்கான விடையும் அங்கே தொக்கி நிற்பதைக் காணமுடியும். சாதாரண மனிதர்களுக்கு இந்த வினா எழுவதேயில்லை. அவர்களுக்கு அந்த வினாவிற்கான விடை எந்தப் பலனையும் அளிக்கப் போவதுமில்லை. இதனால்தானோ என்னமோ, பகவான் பலமுறை இந்த வினாவை எழுப்பி, அதற்கு விளக்கங்கள் பல அளித்தாலும், இதோ கேள்வி - இதோ பதில் என்ற முறையில் விடையேதும் அளிக்கவில்லை.*

*காரணம் என்ன?*

*ஊகிக்க முயற்சி செய்யலாம்.*

*'நான் யார்?' என்ற கேள்வி உலக வாழ்வில் புண்பட்டு, தத்துவ உலகில் அடியெடுத்து வைத்து, மனம் பண்பட்ட மாந்தருக்கே, கைகூடும். இது வெறும் நூலறிவால் மட்டுமே சாத்தியமாவதில்லை. அகந்தையை அழித்த சாதகனுக்கே இது இயலும். இந்த நிலையை அடைந்தவன் ஒரு மாபெரும் தேடுதலில் இறங்குகிறான். இந்தப் புனிதப் பயணத்தின் இறுதியில் அவனுக்கு இந்தக் கேள்வியின் விடை கிட்டுகிறது. அதுவே முக்தி. இந்தப் பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் அவனுக்கு ரமண தீபம் வழிகாட்டிச்*

செல்லும். ஒரு தாயைப்போன்று பகவான் அவனுக்குத் துணை நிற்பார். ஆனால் அந்தப் பயணத்தை அவன் தான் துவங்கி, தொடர வேண்டும்.

இதுவே உபனிடதங்கள் காட்டும் வழி. தைத்ரீய உபனிடதத்தில் ப்ருகு என்ற சிறுவன் பலமுறை தவம் செய்த பின்னரே பிரம்மத்தை அறிந்து கொள்கிறான். மனமும் வாக்கும் அதை நாடிச்சென்று தோல்வியடைந்து திரும்பியதாக மற்றோரிடத்தில் பார்க்கக் கிடைக்கிறது. (யதோ வாசொ நிவர்த்தந்தே அப்ராப்ய மனசா சஹ.) குறுக்கு வழிகள் வேதாந்த விசாரத்தில் கிடைப்பதில்லை. ரமணர் இந்தப் பயணத்தை எளிதாக்கிக் கொடுத்துள்ளார் என்பதே அவர் நமக்களித்த மாபெரும் வரம்.

இந்த விசாரத்தின் ஆரம்பத்தில் நான் என்பது என்ன என்பதை அவர் கூற்றில் பார்ப்போம். எது நான் இல்லை என்பதை முதலில் அவர் விளக்குவார்.

உடல் பொறி உள்ளம் உயிர் இருள் எல்லாம்
ஜடம் அசத்து ஆனதால் உந்தீபற
சத்தான நானல்ல உந்தீபற (உபதேசவுந்தியார்-22)

இந்த உடல், இந்த்ரியங்கள், மனம், பிராணன், மற்றும் அகங்கார இருள் இவையெல்லாம் ஜடம் போன்றவை. அஞ்ஞானத்தால் சூழப்பட்ட வியக்தியின் இந்தப் பஞ்ச கோசங்களும் சுயமாக இயங்கக்கூடியவை அன்று. நான் என்பது ஜடமல்ல. அது ஒளி மயமானது. இதை உணராத மானுடன், சரீரமும் மனமுமே நான் என சிந்திக்கின்றான். இந்தக் கீழ்ப்படியில் அவன் இருக்கும்வரை, அவன் 'நான் யார்?' என்ற விசாரத்தில் இறங்குவதில்லை. அடுத்தடுத்த படிகளில் அவன் ஏறும்பொழுது அவன் எண்ணங்கள் விசாலமாகின்றன. மனம் ஜட வஸ்துக்களை அடையாளம் காணத் தொடங்குகிறது. ஒரு சத்தான நானை அறிய அவன் முற்படுகிறான்.

இந்த நிலையை அடைந்த சாதகனுக்கு நான் என்பதின் பல்வேறு விளக்கங்களை பகவான் அளிக்கிறார். அவை இந்தப் புனித யாத்திரையில் மேலும்மேலும் முன்னேற சாதகனுக்குப் பெரும் துணையாக அமைகின்றன.

நான் என்ற அகந்தையை முற்றும் நீக்கிய மகனீயர்களில் சிறந்தவர் பெரியாழ்வார். இறைவனையே மருமகனாகப் பெறும் பேறு பெற்றவர். ஸ்வசுரம் அமர வந்த்யம் ரங்கனாதஸ்ய சாக்ஷாத் (தேவர்களாலும் போற்றப்படும் சாக்ஷாத் ரங்கநாதனுடைய மாமனார்) என்ற வரிகள் இவர் புகழை பறை சாற்றும். பண்டிதர்களுக்காக வைக்கப்பட்ட ஒரு சிறந்த வித்வத் சபையில், இவருடைய சிறந்த வாதத்தால் கவரப்பட்ட பாண்டிய மன்னன், இவருக்கு மரியாதை செய்து யானைமேல் ஊர்வலமாக அழைத்து வருகிறான். மதுரைவாழ் மக்கள் பெருந்திரளாக வந்து ஆழ்வாரைத் தரிசிக்க ஆவலுடன் இருக்கின்றனர்.

பக்தனுக்கு அளிக்கப்பட்ட கௌரவத்தைக் கண்ட பரமன் பேருவகை கொள்கிறான். இதை நேரே கண்டுகளிக்க திருவுள்ளம் கொண்ட பெருமான் வைகுண்டத்திலிருந்து இறங்கி கூடல் நகருக்கு வந்து சேருகிறான். வைகுண்டநாதனைத் தரிசிப்பது என்பது வாழ்நாளில் காணக்கிடைக்கவொண்ணா அரிதான நிகழ்ச்சி ஆயிற்றே! மக்கள் ஆனந்தக் கடலில் ஆழ்ந்து விடுகின்றனர்.

தன்னைக் காணத், தான் வணங்கும் பெருமானே வந்தது பெரு மகிழ்ச்சிக்குரிய சூழல். ஆனால் ஆழ்வார் உள்ளத்திலோ கலவரம்.

ஏனோ?

“இங்கு வந்துள்ளவர்கள் அனைவரும் ஒரே உள்ளத்தவர் அல்லர். இறைவன்பால் பொறாமை பிடித்தவரும் இங்கு இருக்கலாம். அவர்தம் கண் எச்சில்

பட்டால், சுகுமாரனாகிய எம்பிரானுக்கு ஏதேனும் கேடு நேரிடுமோ” என்ற அச்சம் அன்பே வடிவான அந்தப் பெருந்தகையின் உள்ளத்தில் எழுந்தது. அகில உலகையும் படைத்துக் காக்கும் நாராயணனுக்கே, ஆழ்வாரில் பெரியவர் பல்லாண்டு பாடுகிறார். இறைவனுடன் அவன் வல மார்பினில் வாழும் மங்கைக்கும் அவனுடனே உறையும் பெரும்பேறு பெற்ற சங்கு, சக்கரத்துக்கும் பல்லாண்டு கூறுகிறார் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியை வளர்த்தெடுத்த அப்பெருந்தகை.

தன்னைக் காண வந்த தெய்வத்திடம், தான் உய்ய வரம் கோராமல், அந்தத் தெய்வத்திற்கே காப்புப் பாடிய ஆழ்வார் நான் என்ற அகந்தை நீங்கிய சான்றோரில் தலைமகனாகக் கொள்ளப்படுகிறார். அடுத்த பாடலில் தன்னைப் போன்ற மகனீயர்களையே தன் குழாமில் சேர்த்து இறைவனையே அனவரதமும் நாட வேண்டும் என்னும் வேட்கையை உலகத்திற்கு உறைக்கிறார்.

*வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல்*
*வந்து மண்ணும் மணமும் கொண்மின்*
*கூழாட்பட்டு நின்றீர்களை*
*எங்கள் குழுவினில் புகதலொட்டோம்.*

பண்பட்டோர் சகவாசமே சத்சங்கம் எனப்படுகிறது. சகவாசம் என்ற சொல்லுக்குப் பொருள் கூடஉறைதல் என்பதாகும். இதை ஆழ்வார் விரும்புவது இயற்கையே.

உலகத்தோரை அன்புடன் அணைத்துக்கொள்ளும் பாங்கு தன்னலம் நீங்கியதின் அடையாளம். இதை ஒரு சமுதாயப் பண்பாடாக வேத காலத்து ரிஷிகள் காண்கின்றனர். யஜுர் வேதத்தின் ஒரு மந்திரம் இதைப் போதிக்கிறது.

*மித்ரஸ்ய சக்ஷுஷா ஸமீக்ஷாமஹெ*

நாம் ஒருவரை ஒருவர் என்றென்றும் நட்புக் கண்ணோட்டத்துடனே காண்போம் என்ற உயர்ந்த தத்துவத்தை யஜுர் வேதம் பறையறைகிறது. அகங்காரம் மிகும்போது, அன்பு மறைந்து, ஆணவம் தலை தூக்குகிறது. இச்சூழலில், மனிதரிடையே பரஸ்பர விரோதபாவமே நிலை நாட்டப்படுகிறது. வேதம் காட்டும் வழி இது அல்ல. நான் உன்னை, நண்பனாகக் கருதுவேன். நீயும் அவ்வாறே என்னிடம் நட்பை வெளிப்படுத்து. நாம் இருவரும் நேசபாவத்தை என்றென்றும் கடைப்பிடிப்போம். இதுவே மறையின் மார்க்கம். 'மித்ரஸ்ய சக்ஷுஸ்' என்றால் 'நட்புக் கண்ணோட்டம்' என்று கொள்ளலாம். வேத காலத்தில் இது ஒரு சீரிய சமுதாயப் பண்பாக மிளிர்ந்தது. பிறருடன் பகிர்ந்து கொள்ளாமல், தான் மட்டும் உணவை உண்ணுபவன் பாபி. அவனுக்கு எந்த நூலும் நல்வழி காட்ட இயலாது, என்பது வேதம் காட்டும் நன்னெறி.

இந்த அன்பு வழி மொழி, குலம் இவற்றையெல்லாம் கடந்து, அனைவரிடமும் சென்று கை குலுக்குகிறது. இது சத்துவ குணத்தின் நிலைப்பாடு. வேதம் வழி காட்டும் உயர் நிலை. எனக்கு எல்லாம் வேண்டும், மேலும் மேலும் பொருள், புகழ், அதிகாரம் எல்லாமும் என்னை வந்து அடைய வேண்டும். நானே உயர்ந்தவன் என்ற தன்னல செருக்கில் உள்ள ரஜோ குணத்தவருக்கு அன்பும் நட்பும் அகராதிச் சொற்களாகவே இருந்து விடும். இதற்கு நேர் எதிரிடையாக, "நான் கீழ்ப்பட்டவன், சாதிக்கத் திராணி இல்லாத பேடி, தோல்வியையே எப்பொழுதும் சந்திக்கும் ஒரு அப்பிராணி. சபிக்கப் பட்டவன் என்று புலம்பும் தமோ குணமும் அன்பையொழித்து பொறாமையையே வெளிப்படுத்தும்.

*ரஜஸ், தமஸ் என்ற குணங்களின் பிடியில் சிக்கித் தவிக்கும் மாந்தருக்கு 'நான் யார்' என்ற கேள்வி எழ வாய்ப்பு இல்லை. அவர்கள் தங்கள் குறுகிய உலகில், நிழல்களைத் தேடி அலையும் துர்பாக்கியசாலிகள். ஆனால், தனக்கென வாழா சான்றோர்கள், சத்துவ குணத்தை அடைந்து உலகின் சிற்றின்ப வாழ்வினைத் துச்சமென மதிப்பர். இவ்வுலகிலேயே இறைவன் அடி பற்றும் பேறினைப் பெறுவர். "இம்மையே, உன்னை சிக்கெனப் பிடித்தேன் எங்கு எழுந்தருள்வது இனியே" என்று மாணிக்கவாசகர் பக்தி வானின் முகட்டில் நின்று அனுபவித்து மகிழ்ந்தார் அல்லவா? அதற்கு அந்தப் பெருந்தகையார், தனது முயற்சியையோ, அறிவையோ, தவத்தின் வலிமையையோ காரணமாகச் சொல்லவில்லை. நான் பொய்யில் புரண்டு பொழுதினைக் கழித்த புலையன். எனக்கு அந்த ஆரமுதான பரம்பொருள், செம்மையான சிவபதம் அளித்தது. நானாகப் பெற்றிருந்தால் அது நிலைத்திருக்காது. அது சிவனளித்த சொத்து. அதற்கு என்றும் அழிவில்லை என்று அனுபவித்துப் பாடுகிறார். பின்னர் சிவபுராணத்தில் "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" என்று இறையருள் பெறவும் இறைவனே காரணம் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.*

*இந்த வேதாந்தக் கருத்தைக் கம்பன் தனக்கே உரிய நாடக பாணியில் பல இடங்களில் காட்டுகிறான். இங்கு கதையின் போக்கிலேயே பாத்திரங்கள் மூலமாக சீரிய தத்துவங்களைக் காட்டுவதில் கம்பன் கவி நயத்தையும் காண்கின்றோம்; மற்றும் அவன் விதைக்கும் இந்திய வேதாந்தத்தின் பல வெளிப்பாடுகளையும் பார்க்க இயலுகிறது. "உன்னைக் காட்டுக்குப் போகும்படி உன் தந்தை இயம்பினான்" என்று கைகேயி உரைக்க, அது கேட்ட ராமன் முகமலர்ந்து, "இது மன்னனின் ஆணையின்றி உம்முடையதாயினும் நான் மறுக்க*

மாட்டேன். என் இளையோன் எதை அடைந்தாலும் அது நான் பெற்ற பேறல்லவா?” என்று அதை சிரமேற் கொள்கிறான்.

மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ?

க்ஷத்திரிய குலத்து இளவரசனை முதிர்ந்த வேதாந்தியின் நிலையில் இருத்தி அழகு பார்க்கிறான் கவிச் சக்கரவர்த்தி.

உலகியல்பின்படி ‘இந்த அரியணை என்னுடையது; நானே இதில் அமர வேண்டும்’ என்ற எண்ணமே அவனுக்கு மூத்த மகன் என்ற நிலையில் வந்திருக்க வேண்டும். அது அரசு தருமத்தின்படி நியாயமும் கூட. ஆனால் ‘மமகாரம்’ முற்றும் நீங்கிய நிலையில் ராமனுக்கு அந்த எண்ணத்தின் நிழல்கூடத் தோன்றவில்லை. மாறாக, பரதனுக்கு அரியணை என்ற நினைப்பே அவனுக்கு பெரிதும் உவகையை அளிக்கிறது. அந்நிலையில் அவன் முகம் புதிதாக மலர்ந்த செந்தாமரையின் அழகையும் விஞ்சி நிற்கப், பார்த்தார் கம்பர். இதை வருணிக்க என் போன்றோரால் இயலாது என்று ஒரு வரியில் முடித்துத் தோல்வியை ஒப்புக்கொள்கிறார். கவி நயம் ஒருபுறம் இருக்க, ‘நான்’ என்ற என்ற அகங்காரம் நீங்கிய ஒரு நல்லோனை உலகத்துக்கு எடுத்து உரைக்கிறார். இதனால்தான் நம்மாழ்வாரும் கற்பார் இராம பிரானையன்றி மற்றும் கற்பரோ? என்று வியக்கிறார். உயர்ந்த நன்னெறியை அறிய விரும்புவோர் ராமபிரானையன்றோ நாட வேண்டும்? தருமத்தின் முழுவுருவாய்த் திகழ்ந்த ராமனை வட மொழி ஆசிரியர் ராமோ விக்ரஹவான் தர்ம: (ராமன் உருவெடுத்து வந்த தருமம்) என்று வருணிக்கிறார்.

ராமன், இந்திய வேதாந்தம் கண்ட சத்துவ குணத்தின் சீரியதோர் அடையாளம். இந்தக் குணத்தின்

தன்மைகளை பகவத்கீதை மற்ற குணங்களுடன் ஒப்பிட்டு விளக்குகிறது.

சத்துவ குணம் நிர்மலமானது. அதனால் அது ஒளியுடன் பிரகாசிக்கிறது. அழிவற்றது. மனிதனை அது இன்பம், பேரறிவு இவற்றுடன் இணைக்கிறது. (14.6)

மாறாக ரஜோ குணம் ஆசாபாசங்களிலும் தமோ குணம் சோம்பல் மற்றும் தெளிவற்ற குணத்திலும் மனிதனை இட்டுச்செல்கின்றன.

இந்தச் சத்துவ நிலையை அடைவது எளிது அல்ல. இதை நமக்கு அழகுற அளிக்கிறார், குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள். இராமனாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த குணங்குடி என்ற ஊரில் பிறந்த இவர் சிறந்த தத்துவ மேதை. இவர் பாடல்கள் நமக்காகவே எழுதப் பட்டவை போன்று அமைந்துள்ளது இவர் சிறப்பு. இறைவனைத் தொழாதிருக்கும் மூடனாகப் பிறந்தோமே என்று நம்மில் பலர் வாழ்நாளில் பல முறை வருந்துகிறோம். அதை இவர் கீழ்க்கண்டவாறு சொல்லுவார்.

நித்தம் உனைத்தொழா நிர்மூடனாயிருக்கும்
பித்தனா யேன்காண் பிறந்தேன் பராபரமே
பாவியாக நான் பிறந்தேனே

என்ற ஏக்கத்தை கீழ்ப் பாடலில் காணலாம்.

பாவ வுடலெடுத்துப் பாதகனா யான் பிறந்துன்
ஆவி கெடுவதுனக் கழகோ பராபரமே

இத்தகைய என்னைக் காக்க வாராயோ, எனக்கும் உந்தன் சீரிய கருணையைக் காட்ட மாட்டாயா, என்று இறைஞ்சுகிறார்.

வாராயோ வென்னிடத்தில் வந்தொருக்கால் என்றன் முகம்
பாராயோ சற்றே பகராய் பராபரமே

எளிமையே உருவான வரிகள். அகந்தையை அழிக்க ஏற்ற சாதனம்.

பற்றுகள் அற்று இருத்தலே அகந்தை அழியச் சிறந்த வழி. ஒரு சிறிய உதாரணத்தால் இதை விளக்கலாம். ஒரு கிரிக்கெட் பந்தயம் நடந்து கொண்டிருக்கிறது. முக்கியமான போட்டி. மாபெரும் கூட்டம். ஒரு பந்தை ஆட்ட வீரன் விளாசுகிறான். அது மைதானத்தின் எல்லையைத் தாண்டிச் சென்று விடுகிறது. அந்தக் கட்சியைச் சேர்ந்த ரசிகர்கள் கை தட்டி ஆரவாரம் செய்கிறார்கள். எதிர்க் கட்சியினர் சோர்ந்திருக்கிறார்கள். அடுத்த பந்தை அடிக்க முயலுகிறான். ஆனால் பந்து மட்டையைத் தாண்டிப்போய் விக்கெட்டைத் தழுவுகிறது. பந்து வீசும் கட்சியைச் சேர்ந்த ரசிகர்கள் கை தட்டி ஆரவாரம் செய்கிறார்கள். மாற்றுக் கட்சியினர் சோர்ந்திருக்கிறார்கள். ஒரு ரசிகர் மாத்திரம் ஆட்டத்தை அனுபவித்து மகிழ்ச்சி அடைகிறார். இரண்டு பந்து வீச்சிலும் அவர் இன்ப-துன்ப நிலைகளை அடைவதில்லை. சிறிது நேரத்திற்குப் பின்னர் திடீரென மழை கொட்ட ஆரம்பிக்கிறது. ஆட்டம் கை விடப்படும் நிலை. இரு அணி ரசிகர்களும் ஏமாற்றம் அடைகின்றனர். அந்த ஒரு ரசிகர் மாத்திரம் எந்தவித உணர்ச்சியும் இன்றி வீடு திரும்புகிறார்.

இதுவே பற்று நீங்கிய நிலை. குறிப்பிட்ட ரசிகரும் மற்றவர்கள் இருக்கும் அதே களத்தில் அதே நிகழ்வுகளைத் தான் பார்க்கிறார். ஆனால் அவர் அவற்றால் தீண்டப் படுவதில்லை. அதனால் அவர் துவந்தம் என்று வேதாந்தம் ஓதுக்கும் இருமைகளைக் கடக்கிறார். ரமண தத்துவத்தை அடைய இதுவே ஏற்ற மனோநிலை.

இதை ரமணரின் வாக்கிலேயே அனுபவிக்கலாம்.

திரும்பி அகம்தனைத் தினம் அகக்கண் காண்
தெரியும் என்றனைஎன் அருணாசலா

(அக்ஷரமணமாலை, 44)

புற விவகாரங்களிலிருந்து மனதை உள்முகமாகத் திருப்பி இடையறாது ஆராய்பவனுக்கே 'நான் யார்'

என்னும் தத்துவம் புலப்படும். இது ஞானிக்கு எளிதாகக் கிட்டும் நிலை. மற்றவர்களுக்கோ மிகக் கடினமாகத் தோன்றக் கூடும். இந்த விந்தையைத் தான் தினம் அகக்கண் காண், தெரியும் என்றனை என்? என்ற வினாவோடு உபதேசிக்கிறாரோ பகவான்.



தயவுசெய்து இந்தக் கட்டுரையின் முதல் பாராவை மறுபடியும் ஒரு முறை படியுங்கள்.

# இணையற்ற பகவான்

Dr. K. **சுப்ரஹ்மண்யன்**

1896-ஆம் ஆண்டு செப்டம்பர் ஒன்றாம் நாள் மதுரையை விட்டு நீங்கிய வேங்கடராமனுக்கு பதினாறு வயதே ஆகி இருந்தது. தனது கல்லூரிக் கட்டணத்திற்காக தந்த 5 ரூபாயில் அவர் 3 ரூபாய் மட்டுமே எடுத்துக் கொண்டார். மதுரை நகரிலிருந்து திண்டிவனத்திற்கான ரயில் கட்டணம்தான் இந்தப் பணம். ரயில் கட்டணத்திற்குத் தேவையான தொகை என்று கருதியதை மட்டும்தான் பகவான் எடுத்து வைத்துக்கொண்டார். நாம் யாராயிருந்தாலும் தொலை தூரம் போகின்றோமே! ஒருவேளை பின்னால் தேவை ஏற்பட்டால் வேண்டுமே என்று முழுத் தொகையையும் அல்லவா எடுத்து வைத்திருப்போம்! பகவானுக்கோ, அருணாசலம் தன்னை முற்றிலும் ஏற்றுக்கொள்வான் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. அண்ணாமலை ஆலயம் வந்தவுடன் நேராக கர்பகிருஹம் சென்று அருணாசலேஸ்வரரிடம் தன் வருகையை அறிவித்தார். பின் ஐயன்குளத்திற்குச் சென்று முத்துகிருஷ்ண பாகவதர் தந்த தின்பண்டங்களை அதனுள் எறிந்தார். தனக்கு அடுத்தவேளை சாப்பாடு கிடைக்குமா, எங்கிருந்து யார் மூலம் கிடைக்கும் என்பது எதுவும் அவருக்குச் சிறிதும் தெரியாது. ஆயினும் இறைவனிடம் பூரண சரணாகதி செய்துவிட்ட இப்பாலகன், இது குறித்துச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. இறைவன்

Dr.K. சுப்ரஹ்மணியன் புகழ்பெற்ற ஆங்கில அறிஞர். ஒப்புயர்வற்ற ரமண பக்தர். இந்தியாவில் ரமண கேந்திரங்கள் ஆரம்பித்துச் செயல்பட அடித்தளமாக விளங்கியவர். அவரது ஆங்கில மூலம் நமது ஆசிரியரால் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

*தனக்குத் தேவையானதை அளிப்பான் என்பதில் அவருக்குப் பூரண நம்பிக்கை இருந்தது. பின்னர் தம் வேட்டியிலிருந்து ஒரே ஒரு கௌபீனத்திற்கான துணியை மட்டும் கிழித்துக்கொண்டு, மீதித் துணியைத் தூர எறிந்துவிட்டார். வேறொரு மாற்றுக் கௌபீனம் வேண்டுமென்றோ மீதமுள்ள துணியைத் துண்டாகப் பயன்படுத்தலாம் என்றோ அவர் சிறிதும் எண்ணவில்லை. தனது மிகக் குறைந்த தேவையை மட்டுமே அவர் எடுத்துக்கொண்டார். இப் பதினேழு வயது சிறுவன் அவ்வினாடியில் காலக் கட்டிலிருந்து ஒரே தாவில் காலம் கடந்த நிலைக்குச் சென்றார். உலகினைத் தூசியை உதறினார். இதுவன்றோ வைராக்கியம்! இதுவன்றோ துறவு! இதுவன்றோ பூரண சரணாகதி!*

வேதங்களிலும் உபநிடதங்களிலும் கூறப்பட்டுள்ள மிக உயர்ந்த தத்துவங்களின் சுவைப் பிழிவாகத் திகழ்ந்தவர் பகவான். நம் முன்னர் முனிவர் பரம்பரையின் பிரதிநிதியாக வந்த அவர், ஸர்வ தந்திர ஸ்வதந்திரராகத் திகழ்ந்தார். இச் சுதந்திரத்தைத் தன்னைச் சூழ்ந்திருந்த அனைவருக்கும் அவர் அளித்தார். தனக்கு வேண்டுமென்று எதையுமே அவர் கோரியதில்லை. பெரும்பாலான சமயம் அவர் மௌனமாகவே இருந்தார். நம் அறிவிற்கு அப்பாற்பட்ட ஓர் அமைதிப் பெருவெள்ளம் அவரிடமிருந்து பிரவகித்துக் கொண்டிருந்தது. எப்படி நோக்கினும் அவர் ஓர் அற்புத வ்யக்தி. எனினும், ஒரு சாமான்யன் போன்றே அவர் வாழ்ந்து கொண்டிருந்தார். எப்பொருளையும் துறந்துவிட வேண்டும் என மக்கட்கு அவர் உபதேசிக்கவில்லை. 'நான் செய்கிறேன்' என்கின்ற கர்த்ருத்வத்தை மட்டுமே கைவிட வேண்டும் என அவர் உபதேசித்தார். அற்புதங்களை ஆற்றல், மனம் படித்தல் போன்ற எதையுமே அவர்

பொருட்டாகக் கருதவில்லை. ஆத்மானுபவம் மட்டுமே ஒருவன் அடையத்தக்கது என்பதே அவர் நிலைநாட்டிய ஒன்று. ஆத்மானுபவம் என்பதே புதிதான ஒன்றை அடைவதல்ல; உண்மையான 'தானை' மறைக்கும் திரைகளை அகற்றுவதுதான் அது என்று விளக்கினார் பகவான்.

ஆத்மானுபவம் அவருக்குத் தேடாமலே வந்தது. 'தேடாதுற்ற நல் திருவருள் நிதி' என்று பகவானே குறிப்பிடுகிறார். அவர் வேதங்களையோ, உபநிடதங்களையோ பாடசாலை சென்று முறையாகப் பயின்றவரல்லர். அறுபத்து மூவர் வாழ்வினை எடுத்துரைக்கும் பெரிய புராணம் ஒன்றே அவர் இளமையில் கற்ற நூல். தனது பதினாறாவது வயதில் அவர் மரணத்தை நேருக்குநேர் சந்தித்தபோது, தன்னறிவு என்ற பெருநிதியம் தானேவந்து அவரை அடைந்தது. அந்த வார்த்தையின் பொருளை அறியாமலே அவர் பிரம்மானுபவத்தைப் பெற்றார். நம் போன்றோரோ அவ்வநுபவத்தைப் பற்றி நிறையப் படித்தாலும், உண்மையில் அதனை அனுபவிக்காமல் இருக்கிறோம்.

பகவான் முதலில் அண்ணாமலையார் ஆலயத்தினுள்ளும் பின்னர் அதைச் சுற்றியுள்ள பிற இடங்களிலும் வாழ்ந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்தவர்கட்கு அவர் ஏதோ மோனத்தவம் இயற்றுவதுபோல் தோன்றியது. உண்மையில் அவர் தவம் ஏதும் இயற்றிக்கொண்டு இருக்கவில்லை. அது அவருக்குத் தேவையுமில்லை. அவர் ஸ்வாநுபூதியை ஏற்கெனவே அடைந்து விட்டார். அதற்குப்பின் தேடித் தவமியற்றி அடைய வேண்டிய எது ஒன்றும் அவருக்குத் தேவையால் இல்லை. பகவானே கூறுகிறார்: "நான் சாப்பிடாமல் இருந்தேன். ஏனையோர் நான் உண்ணாவிரதம் இருப்பதாகக் கூறினார்கள். நான்

பேசாமலிருந்தேன். மற்றையோர் நான் மௌன விரதம் அனுஷ்டிப்பதாகக் கூறினார்கள்."

பகவானின் புகழ் உலகெங்கும் ஓங்கிப் பரவ ஆரம்பித்தது. உலகெங்கிலும் இருந்து ஆத்மதாகம் கொண்டோர் அவரை நாடி வந்தார்கள். இரவும், பகலும் எந்நேரமும் பகவானின் அருட்கதவுகள் அவர்கட்காகத் திறந்திருந்தன.

1949-ஆம் ஆண்டு அவரது இடது தோளில் ஒரு கட்டி, உருவானது. அதனை அவர் முற்றிலும் அலட்சியப் படுத்தினார். பின்னர், பக்தர்களின் வேண்டுகோளின்படி, தன்னை அவர் மூன்றுமுறை ரண சிகிச்சைக்கு உட்படுத்திக் கொண்டார். சரீர வாஞ்சையை முற்றிலும் கடந்த அவரது பேரமைதி கொண்டு வைத்யர்கள் பெரும்பிரமிப்பு கொண்டனர். அவருக்கு சிகிச்சை அளித்த வைத்யர் கூறினார்: "பகவானின் தோளில் கிளைத்தெழுந்த புற்றுநோய்க் கட்டி நூற்புக் கதிர் உருவம் கொண்ட 'சர்கோமா' என்பதாம். இது தோள்பட்டை நரம்பின் வெளிப்பக்கத்தில் இருந்து கிளைத்தெழுவது; பயங்கர வலி. மருத்துவத் துறையில் இதை கதறித் துடித்து வலி என்போம். பகவானோ, இதனைத் 'தன் தோள்மீது சில பூச்சிகள் ஊர்ந்து செல்வது போன்ற உணர்ச்சி' என்றார். இந்த உடல் தன்னுடையது அல்ல என்பதைப்போல பகவான் இவ்வலியுடன் வாழ்ந்து கொண்டிருந்தார். நான் "பகவான்! இது மிக வலிக்குமே!" என்று வினவியபோது, "அதெல்லாம் ஒண்ணுமில்லே!" என்று மந்தஹாசத்துடன் பதிலிறுப்பார்.

தோளிலிருந்து குருதி கொட்டுவதைக் கண்டு பக்தர்கள் துயரத்தில் மூழ்கியபோது, "ஏன் கவலைப் படுகிறீர்கள்! செங்குருதி பெருகட்டுமே! இது ஒரு கோமேதகக் கல்! பாருங்கள், எவ்வளவு சிவப்பாக

*ஜ்வலிக்கிறது! சியமந்தக மணி போல தினம் பொன்னை வாரி வழங்குகிறது! ஒரே வித்யாசம் என்ன என்றால் சியமந்த மணி மஞ்சள் நிறப் பொன்னை வழங்கும் இக்கல்லோ, சிவப்பு நிறப் பொன்னை வழங்குகிறது."*

*தங்களைக் குணப்படுத்திக் கொள்ளலாகாதா? என்று பக்தர்கள் வேண்டியபோது, "இவ்வுடலுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?" என்றார். பக்தர்கள் தன்னைக் குணமாக்கிக் கொள்ளுமாறு அவரை வேண்டிக்கொண்ட போதெல்லாம், "சங்கல்பம் செய்துகொள்ள இங்கே யார் இருக்கிறார்கள்?" என்பார். "நான் எங்கே போகப் போகிறேன்? இங்கேயேதான் இருக்கப் போகிறேன்" என்பார்.*

*பகவான் சாந்நித்யம் இன்று அண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்திலும், அடியார் உள்ளங்களிலும் காணப்படுகிறது. தன்னை நாடுவோர்க்கெல்லாம் முன்போலவே இப்போதும் அவர் கிடைக்கிறார். பகுதியில்லாத மையமாக இப்போது அவர் பரிணமித்துள்ளார்.*

*பகவான் இருபத்துநான்கு மணிநேரமும் காண முடியும் என்பதே ஓர் அசாதாரணமான விஷயம்தானே! அவரைக் காண எவர் அனுமதியும் தேவையில்லை. விசேஷ தர்சன நேரம் என்று எதுவுமே கிடையாது. ஒரு சில மணி நேரத்துக்கு ஒருமுறை நாம் அனைவருமே தனிமை நாடுகிறோம். எவரும் வந்து நம்மைத் தொல்லைப் படுத்தக் கூடாது என்று எண்ணுகிறோம். எந்நேரமும் தொல்லைப் படுத்தப்பட்ட பகவான் ஒருவர் நம்மிடையே வாழ்ந்திருந்தார். ஆனால் அவர் அதைத் தொல்லை என்று கருதவேயில்லை.*

*ஆரம்ப காலத்தில் அவரைச் சுற்றி எல்லோரும் தூங்கிக் கொண்டிருப்பார்கள். அவர் வெளியே செல்ல வேண்டியிருந்தால் மிக ஜாக்ரதையாக மெதுவாக*

தூங்குபவர்களை எழுப்பாமல் அடிவைத்துச் செல்வார். ஓரன்பர் அவருக்கு ஒரு டார்ச் விளக்கை அளிக்க முன்வந்தபோது, பகவான் அது தனக்குத் தேவையில்லை என்று கூறிவிட்டார். பக்தர்கள் வற்புறுத்திய பின்தான் அதை ஏற்றுக்கொண்டார்.

எனினும் எவருக்கும் தொல்லை வராத வகையில்தான் அதைப் பயன்படுத்துவார். இரவில் வெளியே செல்லும் சமயம் அவ்விளக்கின் ஒளியைத் தன் வயிற்றின் மீது காட்டிக்கொண்டு, அச்சிறு வெளிச்சத்தின் உதவியுடன் தன் வழியைக் கண்டு கொள்வார். எல்லோரும் செய்வதுபோல் விளக்கின் ஒளியைத் தரைமீது பாய்ச்சினால் தூங்குபவர்கள் எழுந்து விடுவார்களே என்று கனிவுடன் அவர் இங்ஙனம் செய்வார். அவரது பரிவு இணையற்றது.

இப்பரிவு மனித இனம் மீது மட்டும் காட்டப்பட்ட ஒன்றல்ல. அப்பரிவு பறவைகள், விலங்குகள், தாவரங்கள் அனைத்தையும் அரவணைப்பதாகும். கூடத்தில் சிலசமயம் நாய்கள் வந்து தூங்கும்போது, அவை அவ்விடத்தை அசிங்கப்படுத்தி விடும் எனச் சிலர் புகார் கூறுவர். அந்நாய்களை பகவான் இயற்கை உபாதை அவை தீர்ப்பதற்காக வெளியே அழைத்துச் செல்வார். நாய்கள், குரங்குகள், குருவிகள், மயில்கள், அணில்கள், பசுக்கள் அனைத்துமே அவரிடம் வருவதுண்டு. அவர் அவற்றிடம் பேசிக்கொண்டு இருப்பார். அவர் கட்டளைக்கு அவை கீழ்ப்படியும். ஒரு விஷப் பாம்பைக்கூடக் கொல்ல அவர் அனுமதிக்க மாட்டார். அவர்கள் இருப்பிடத்திற்குத்தான் நாம் வந்துள்ளோம். அவர்கட்கு நாம் பாதுகாப்பு அளிக்க வேண்டாமா? என்பார். அவர் சந்நிதானத்தில் சதா சலித்துக்கொண்டு இருக்கும் குரங்குகள்கூட



அமைதியாய் இருக்கும். அவர் கூடத்தில் வீற்றிருந்தபோது ஒரு குரங்கு அவர் அருகே செல்ல முயன்றது. அச்சம்கொண்ட அன்பர் சிலர் அக்குரங்கைத் துரத்திவிட முயன்றனர். "நீங்கள் எல்லாம் இவளைத் துரத்த முயல்கிறீர்கள். இவளோ தன் குழந்தையை என்னிடம் காட்ட வந்துள்ளாள். நீங்கள் உங்கள் குழந்தைகளையும், பேரக் குழந்தைகளையும் என்னிடம் காட்ட வருவதில்லையா? அவளும் அதே செயலைச் செய்ய நீங்கள் ஏன் விடக்கூடாது? என்றார்.

சிறிதுநேரம் அங்கே தங்கியிருந்த அம்மந்தி பின்னர் சந்தோஷக் கூச்சல் போட்டுக்கொண்டே அங்கிருந்து அகன்றது. அணில்கள் அவர் ஆசனத்தின்மீது ஏறி அவர் கரங்களில் இருந்து பருப்பு விருந்துபெற்று மகிழும். அவர்தம் அன்புக் கதிரொளி அனைத்து உயிர்கள் மீதும் படிந்தது.

(தொடரும்)

# உள்பாதை

## புனிதவதி

ஒரு சிலரே இந்தப் பாதையைப் பற்றி அறிந்து பின்பற்றுகிறார்கள். இது கேக்கின்மேல் நடப்பது போன்றது. நேரான பாதை. வளைவுகளோ, விபத்து நடக்கும் என்ற பயமோ கிடையாது.

நிதானமாக ஆமை அல்லது நத்தைபோல் நகர வேண்டும். வெளிப்பாதை சுழற்சிபோல் மிகமிக வேகமாகப் போய்க்கொண்டேயிருக்கிறது. எங்கு போய் நிற்குமோ, எதில் மோதுமோ எதிர்காலத்தில் என்ன நடக்குமோ தெரியவில்லை. பார்ப்பதற்கு அழகாக மின்னுகிறது. மின்னுவதெல்லாம் பொன்னல்ல. காலியாக, வெற்றிடமாக இருக்கிறது. அதை அறிய நாம் உள்ளே வேர் மட்டத்திற்குச் சென்று ஆராய வேண்டும்.

கடல் ஆழமாக இருக்கும் என நம் அறிவுக்குத் தெரிகிறது. அதன் அடி மட்டத்தில் விலைமதிப்பற்றவைகள் புதைந்து கிடக்கின்றன என்றும் அறிவோம். ஆனால் உள்ளே மூழ்கிச் சென்றால் தான் உண்மையை நேரில் காணமுடியும்.

தானியங்கள் உரலில் போட்டு இடிக்கும்பொழுது, உலக்கையைத் தூக்கினால், தானியங்கள் உடனே மேலே கிளம்பிவிடும். உலக்கையை அதிகம் தூக்காமல் இடித்துக் கொண்டேயிருந்தால் தானியங்கள் சீக்கிரம் மசிந்துவிடும். விசாரத்தைத் தொடர்ந்து செய்து எண்ணங்களை அடக்க வேண்டும். அழிக்க வேண்டும். (உள்முக உலக்கையால் ஓயாது இடித்து என்பது பகவான் வாக்கு).

நாம் தீவிரமாகத் தேடினால் தக்க சமயத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தேடினால் கிடைக்கும், தட்டினால் திறக்கப்படும்.

குருவின் வாக்கு எதுவாக இருந்தாலும் நாம் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். போர்முனையில் அதிகாரி சுடு என்றால் உடனே சுட வேண்டும். ஒரு நொடி தாமதம்கூட நிலையை மாற்றிவிடும்.

ஜமதக்னி முனிவருக்கு நான்கு புதல்வர்கள். நால்வரும் அவரிடமே சிஷ்யராகக் கல்வி பயின்றனர். ஒருமுறை அவர் மனைவியின்மேல் கோபம்கொண்டு, அவள் தலையை வெட்டச் சொன்னார்.

மூன்று புதல்வர்கள் அவர் ஆணையை ஏற்காமல் மௌனமாக இருந்தனர். பரசுராமர் என்ற நான்காவது மைந்தர் சிறிதும் தாமதிக்காமல் உடனே தன் தாயின் சிரசைக் கொய்தார். முனிவர் சந்தோஷம் அடைந்து உனக்கு என்ன வரம் வேண்டுமானாலும் கேள் என்றார்.

பரசுராமர் என் தாய் உயிர் பெற்று எழவேண்டும் என்றார். ரேணுகாதேவி என்ற அவர் தாயும் உயிர்பெற்று அனைவரும் சந்தோஷமாக இணைந்தனர்.

மிகவும் பொறுமையாக நேராக நட. இந்தப் பாதை மிகமிகக் கடினமானது. அதை அடைவதற்கு அநேக பிறவிகள் எடுக்க வேண்டியிருக்கும். ஆனால் கதவு, திறந்திருக்கிறது. எல்லாம் வல்ல இறைவன் விரித்த கைகளுடன் நம்மை வரவேற்கக் காத்திருக்கிறார். நம்மை என்றும் மறுக்காமல் ஏற்றுக்கொள்வார். நாம் அவரை நெருங்கினால் காந்தம்போல் இழுத்துக்கொள்வார். நம் ஒரே நோக்கம் அவர் பாதமாக இருக்கவேண்டும்.

மிலரப்பா என்பவர் ஒரு திபெத்திய ஞானி, அவர் ஆச்ரமம் இன்றும் திபெத்தில் இருக்கிறது. ஆரம்ப நிலையில் அவர் குரு அவரை வீடுகட்டி இடித்து பின் மீண்டும் கட்டச் சொன்னார். வீடு கட்டுவது இடிப்பது தெய்வீக சாதனை அல்ல. ஆனாலும் அதனால் அவர் மனம் பொறுமை அடைந்தது. பிற்காலத்தில் அவர் கடுமையான சாதனை செய்து வானில் பறக்கும் சக்தியை அடைந்தார்.

குதிரையின் முகத்தை இருபக்கமும் மறைந்து நேராக மட்டும் பார்க்கவைத்து ஓட்டுவார்கள். அதுபோல நம் பார்வை எதிர்நோக்கியே இருக்க வேண்டும். இருபுறமும் கவர்ச்சியாக இருந்தாலும் நமக்கு அது முக்கியமல்ல. அதைப் புறக்கணிக்க வேண்டும்.

நால்வரில் ஒருவரான அப்பர் எந்தக் கோவிலுக்குச் சென்றாலும் உழவாரப்பணி என்று கோவிலைச் சுத்தம் செய்வார். சிவபெருமான் அவரைச் சோதிக்க எண்ணி திருப்புகலூர் என்ற ஊரிலுள்ள கோவிலில் கூழாங்கற்களுடன் விலை உயர்ந்த நவரத்ன கற்களைப் பரப்பினார். அப்பர் இரண்டுக்கும் வித்யாசம் தெரியாமல் அதையும் கூட்டித் தள்ளினார்.

பொறுமையும், நிதானமும்தான் ஒரே வழி. ஔவையார் என்ற தமிழ்ப்பெரும் மூதாட்டி பூஜையை முடித்து கைலாயம் செல்ல வேண்டும் என்று அவசரம் அவசரமாக பூஜை செய்தார். சுந்தரர் என்று ஞானி வெள்ளை யானையில் கைலாயம் நோக்கிக் கிளம்பிவிட்டார். அவரைப் பின்தொடர ஔவையார் நினைத்தார். விநாயகப் பெருமான் அவர் முன் தோன்றி பொறுமையாக பூஜை செய். நான் என்னை அழைத்துச் செல்கிறேன் என்றார்.

ஔவை பூஜையை முடித்ததும் விநாயகர் தன் துதிக்கையால் அவரை எடுத்து சுந்தரருக்கு முன் கைலாயத்தில் சேர்த்தார்.

கடவுள் நமக்கு உதவ எப்பொழுதும் காத்திருக்கிறார். நாம் ஒரு அடி அவரை நோக்கி வைத்தால் அவர் முன் வந்து நாம் முன்னேற வழிநடத்துவார். நாம் பயமில்லாமல் எதிர்பார்ப்பு எதுவும் இல்லாமல் மிக்க கவனத்துடன் அவரை நாடவேண்டும்.

ஒவ்வொரு வினாடியும் அவருக்காக ஒவ்வொரு அடியும் அவரை நோக்கி அவருக்காக இருக்க வேண்டும்.

# நிலைமையும், நிலையாமையும் – பகவான் உபதேசம்

**வஸந்தா ராகவன்**

*ஞான மார்க்கத்தைப் பின்பற்றுவதற்கு தகுந்த மனப் பயிற்சி தேவை. இதனை நான்கு வகையாக எடுத்துரைக்கிறார் ஸ்ரீமத் பகவத் பாதர், அவையாவன:*

*1) நித்யா நித்ய வஸ்து விவேகம் (எது நிலையானது, எது நிலையற்றது என்ற அறிவு)*

*2) சமதமாதி ஷட்க சம்பத்தி (சமம், தமம், ப்ரத்யாஹாரம் போன்ற மனத் தேவைகள்)*

*3) இஹா முத்ர பல போக (உலகப் பொருட்கள்மீது பற்றின்மை)*

*4) முமுட்சுத்வம் (இறைமை அடைய வேண்டும் என்ற தீவிர தாகம்)*

*இந்த நான்கு படிகள் குறித்து நமது ஆசிரியர் கடந்த சொற்பொழிவில் குறிப்பிட்டுள்ளார். அதில் நித்யா நித்ய வஸ்து விவேகம் குறித்து இப்போது காண்போம்.*

*நித்யா நித்ய வஸ்து விவேகத்தைச் சிறப்பாக விவரிக்கும் நூல் யோக வாசிட்டம். இதில் ஓர் அத்தியாயத்தில் ஜனகர் சித்தர்களின் சம்பாஷணையைக் கேட்டு எவ்வாறு பக்தி அடைந்தார் என்று விவரிக்கப்பட்டுள்ளது. வடமொழி நூலின் தமிழாக்கமான ஞான வாசிட்டம் நூலின் இச்சம்பாஷணை ஆறு ஸ்லோகங்களில் உள்ளது. ஞான வாசிட்டத்திலோ ஐந்து செய்யுட்கள் மட்டுமே உள்ளது. இதைக் கண்ணுற்ற பகவான் அந்த ஆறாவது ஸ்லோகத்தையும் தமிழ்ப் பாடலாக்கிச் சேர்த்தார்.*

*நித்யாநித்ய வஸ்து விவேகத்தினை விளக்கும் இந்த ஆறு செய்யுட்களின் பொருளை பகவான் குஞ்சு சுவாமிக்கு விளக்கினார். அப்பொருளாவது:*

*1) அறிபவனும், அறிபடுபொருளும் ஐக்கியம் ஆகும்போது ஆத்மானந்தம் பிறக்கிறது. இதுவே ஆன்ம ஞானம் என்பது. இதையடைய முயற்சி செய்ய வேண்டும்.*

*2) காண்பவன், காணப்படு பொருள், காணுதல், இம்மூன்றையும் காண்பிக்கும் (தான் எனும்) ஆத்மாவைத் தியானித்தலே வாசனைகளை ஒழிக்கும் வழி. இருப்பிற்கும், இல்லாமைக்கும் ஆதாரமான ஆன்மாவைத் தியானிக்க வேண்டும்.*

*3) எல்லா உலகங்களும் எதன்கண் நிலையாய் உள்ளதோ, அவையெல்லாம் எதனுடையதோ, எதிலிருந்து எல்லாம் எழுகின்றதோ, எதன் பொருட்டு எல்லாமே ஆகுமோ, எதனால் இவையெல்லாம் எழுந்து பின் எதுவாக ஆகின்றனவோ — அதுவே நித்ய வஸ்து, உள்ள பொருள். இதை — அந்த ஸ்வரூபத்தை நம் உள்ளத்தில் தியானம் செய்ய வேண்டும்.*

*4) நான்-நான் என்று ஒளிர்ந்து விளங்கும் அந்த நித்ய பிரம்மத்தைத் தியானிக்க வேண்டும். தன் இதயத்தில் ஸத்வஸ்துவைத் தேடாமல் அறிவிலிகள் தனக்கு வெளியே புறஉலகில் கடவுளைத் தேடி அலைகின்றனர். கௌஸ்துப மணியைத் தூர எறிந்து விட்டுக் கிளிஞ்சலைத் தேடி ஓடி அலைவது போலல்லவா இது உள்ளது.*

*5) ஆசை அலைகளை அறவே ஒழித்தவன் மாத்திரமே நித்ய வஸ்துவை அடைய முடியும். அன்றும் என்றும் தீய விஷயங்கள் இன்பம் தரமாட்டா என்று அறிந்தும் அவற்றைப் பற்றிக் கொண்டிருப்பவன் பந்தத்திலேயே*

இருப்பான். அவனைக் கழுதை என்றாலும் அவமானம் கழுதைக்கே.

6) தேவேந்திரன் தன் சக்தி வாய்ந்த ஆயுதத்தால் மலைகளை உடைத்தெறிவதுபோல நாமும் நம் சக்திவாய்ந்த பகுத்தறிவாகிய ஆயுதத்தால் சீறிப் படமெடுத்தாடும் கொடிய புலன்களைத் தாக்கி அழிக்க வேண்டும். இதனால் அமைதியுற்றுச் சாந்தி நிலை அடைந்து சுகமய ஆன்மாவில் அமிழலாம்.

பகவானது நித்யாநித்ய வஸ்து விவேகம் பற்றிய உபதேசத்தை விசுவாநாதசுவாமியின் வாக்கினில் காண்போமா?

"உலகில் நிலவும் குழப்பங்கள், கொந்தளிப்பு எல்லாமே மனத்தை சார்ந்தவையே. அது தன்னையே அறியாமையினால் இரட்டைகள் (நன்மை, தீமை) முப்புடிகள் (நான், நீ-அவன்; ஜகத், ஜீவன்-ஈஸ்வரன்; செய்பவன், செயல்-செயப்படு பொருள்) என்று பிரித்துக்கொண்டு தவிக்கிறது. வாழ்வின் அனுபவங்கள் எல்லாம் நுகர்பவனையே சார்ந்தவை. அவன் உண்மையில் இருப்பு என்பது இல்லாதவன், நிழல் மாத்திரமேயானவன். ஒவ்வொருவர் அகத்துள்ளும் உண்மையாக ஒளிரும் தானாகி சுத்த ஸத்வமாக விளங்கும் பரிபூர்ண உணர்வு ஒன்றே நித்ய ஸத் வஸ்துவாகும். அதில் இரட்டைகள், முப்புடிகள் ஒன்றுமே இல்லை. அகம்பாவத்தையும் அதன் அனுபவங்களையும் நிழலென ஒதுக்கித் தள்ளினால் எப்போதுமுள்ள நித்ய வஸ்து தானாக ஒளிரும். இவ்வுண்மையை அறிவுபூர்வமாக புரிந்து கொண்டால் கூடச் சாந்தியும் பற்றின்மையும் நிலவும்.

"முடிவற்றுச் சுழன்று விரைந்தோடும் எண்ணற்ற அனுபவங்களின் ஊடே சில நிமிடங்களாவது விலகி நின்று நாம் நமது உண்மை நிலையை அனுபவித்துப்

பார்க்க வேண்டும். வரையற்றதும் நிரஞ்சன நிர்விகாரமானதும், வர்ணனைக்கு எட்டாததுமான அந்த நிலை தூய பரிபூர்ண உணர்வு மாத்திரமாக நிற்பது, உள்ளது அது ஒன்றே. புத்தரும் சங்கரரும், நமது பகவானும் என்றும் சாஸ்வதமாக அது 'நீ' ஆவாய் என்று கலங்கரை விளக்காக ஒளி பாய்ச்சுகிறார்கள். இந்த சத்திய ஸ்வரூபிகளின் நினைவு நம்மை உள்ளே இழுத்துச் சொல்லவொண்ணாச் சாந்தியில் சேர்த்துவிடும்."

# இனிவரும் திருநாட்கள் - □□□□

| | | | |
|---|---|---|---|
| *ஏப்ரல்* | 16 | *வியாழன்* | *ஸ்ரீபகவானது 65ஆவது ஆராதனை* |
| *ஜூன்* | 10 | *புதன்* | *மாத்ருபூதேஸ்வரர் மகாபூஜை* |
| *ஜூன்* | 28 | *ஞாயிறு* | *பசு லக்ஷ்மி ஆராதனை* |
| *செப்டம்பர்* | 1 | *செவ்வாய்* | *அருணை விஜய தினம்* |

மேற்கண்ட விழா நிகழ்வுகளின் மாற்றங்களை அறிய ஆச்ரம இணையதளம் www.sriramanamaharshi.org பார்க்கவும்

## ரமணோதயம் காப்பு நிதி

## தொடரும் நன்கொடையாளர்கள்

| | | |
|---|---|---|
| *திரு* | *ராமலிங்கம், திருச்சி* | 500 |
| | *கஸ்தூரி ரங்கசாமி, கோவை* | 500 |
| *திருமதி* | *காயத்ரி கோவிந்த், பிரின்ஸ்டன்,* USA | $ 101 |

# காலம்

**ஸ்ரீ நொச்சூர் வேங்கடராமன்**
தமிழாக்கம்: கௌதமன்

மனம் என்பது கடந்த காலத்திற்கும் எதிர் காலத்துக்கும் இடையே இடையறாது ஆகும் ஓர் ஊசல் தெய்வீக ஒளிக்கோளத்தினை மூடும் ஒரு முகில் காலத்தினின்று விடுதலை பெறுவது என்பது மனத்திலிருந்து விடுதலை பெறுவதே.

'நிகழ்வு' என்பது மட்டுமே மெய்யானது என்பதை அறிவாய்

கடந்த காலமும், எதிர்காலமும் கவனத்தை ஈர்க்க
மனம் செய்யும் சூழ்ச்சிகளே
மனத்தினை நம்பாதே
மாறாக, எண்ணங்களுக்கு இடையே
மெலிதாக்கி கிசுகிசுக்கும்
இதை ஒலியைக் கேட்பாய்
'நான் உள்ளேன்' என்னும் குரலை ஆழ்ந்துகேள்
'நான்', 'நான்' என்பதே எப்போதும் ஒலிக்கும்
ஆன்மிக ஒலி, உயர் மந்திரச் சொல்.
உன்னுள்ளே ஆழ்ந்து பயணித்து
உள்ளே எப்போதும் சுழன்றாடும்
'நான்' என்னும் ஜபமாலையைக் கண்டறி
'நான்' என்னும் உணர்வே முக்தியின் மற்றொரு நாமம்
இவ் வான்ம உணர்வு -
கடந்த காலத்திலோ, எதிர் காலத்திலோ இல்லை.
இங்கே, இப்பொழுதே உள்ள
அழிவுறாத ஆத்மாவே அது
புதுப் பொலிவுடன் திகழும்
நிகழ்காலம் என்னும் பெருங்கடலில்
மனம் 'கடந்த காலம்', 'எதிர்காலம்'

என்னும் அலைகளை உருவாக்குகிறது
முடிவற்ற சத்யத்தினை இக்கணமே
இங்கே, இப்பொழுதே உணர்வாய்.
அதுவே ஆத்மா
அதுவே கடவுள்
அதுவே பேருண்மை

# பகவானின் நினைவுடன் வாழ்

**ரமண ராஜசேகர்**

*பகவானின் புன்னகையைக் காண்! - அவர்*
*பாதங்கள் பணிந்தாலே இன்பங்கள்தான்!*
*பகவான்நம் அறிவுக்குத் தேன்! - அவர்*
*பார்வைதரும் தீட்சைகண்டு ஆனந்தம் பேண்! (பகவானின்)*

*பகவானே ஆத்மாவின் வேர்! - அவர்*
*பார்வையாலே பொங்கிடுமே மனமென்னும் தேர்!*
*பகவானே சிவனுக்கு நேர்! - ரமண*
*பகவானைத் தந்ததெங்கள் திருச்சுழி ஊர்! (பகவானின்)*

*பகவானின் நினைவுடன் வாழ்! - ரமண*
*பகவானை எண்ணாத வாழ்வெல்லாம் பாழ்!*
*பகவானின் நல்லருளைக் கேள்! - ரமண*
*பகவானே நமைக்காக்கும் முருகனின் வேல்! (பகவானின்)*

*பகவானே உன்னையறியும் "நான்"! - மனம்*
*பார்த்தாலே துள்ளியோடும் காட்டுவேக மான்!*
*பகவானே அமைதிஎன்னும் தூண்! - ரமண*
*பகவானைத் தியானித்து ஆத்மாவைக் காண் (பகவானின்)*

*பகவானே உயிருக்கு ஊண்! - ரமண*
*பகவானே உலகத்தின் தாய்தந்தை தான்!*
*பகவானே வேதம் முழங்கும் வான்! - ரமண*
*பகவானால் வாழ்வினிலே ஊறுமின்பத் தேன்!*
*(பகவானின்)*

# ரமண தூதர் முருகனார்

**பிர. கிரிதர ஜெகதீஷ்**

தன் தலைவனுடைய செய்தியை, கருத்தைத் தெளிவாக, சுருக்கமாக அதற்கு உரியவரிடம் எடுத்துச் செல்லும் திறமை படைத்தவரை தூதர் என்று சொல்வார்கள்.

அன்புள்ள இரண்டு உள்ளங்களுக்கு இடையே தூது நிகழும். முரண்பாடான இரண்டு நபர்களுக்கு இடையேயும் தூது நிகழும். முதல்வகைத் தூதில் அன்புப் பரிமாற்றம் இருக்கும். இரண்டாம் வகைத் தூதில் சமாதான முயற்சி இருக்கும். அன்போ, சமாதானமோ காரியம் வெற்றி பெற வேண்டுமென்றால் அதில் தூதனின் பங்கு தொண்ணூறு சதவீதம் இருக்கிறது.

ராமசேனையில் ராமதூதராக மாருதி விளங்கினார். ரமண சேனையில் ரமண தூதராக முருகனார் விளங்குகிறார்.

ராமதூதர் ஆஞ்சநேயர் சீதையைச் சந்தித்தார். ஸ்ரீ ராமரின் செய்தியைக் கூறி சீதையின் செவியைக் குளிரச் செய்தார். ஆஞ்சனேயரின் சொல்லானது அங்கே அமிர்தம்போல செயல்பட்டது. அஞ்சனை புத்திரன், ராவணனையும் சந்தித்தார். அங்கும் ஸ்ரீ ராமரின் பிரபாவங்களை (பெருமைகளை), செய்தியை எடுத்து மொழிந்தார். ஆனால் அவருடைய சொற்கள் அங்கே அமிர்தம்போல செயல்படவில்லை. மாறாக கூரிய அம்புகளால் இலங்கை வேந்தனின் இதயத்தைத் துளைத்ததுபோல செயல்பட்டன.

மரணத்தை அவனுடைய கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தின. அவர் உதிர்த்த சொல் ஒன்றுதான். ஆனால் அது இரண்டுவகை உணர்வுகளைக் கிளப்பியது. 1. ஆனந்தம், இது சீதைக்கு ஏற்பட்டது, 2. மரணபயம், இது இராவணனுக்கு எழுந்தது.

ராமதூது இரண்டு வகையில் செயல்பட்டதுபோல, ரமண தூதும் இரண்டு வகையில் செயல்படுகிறது. முருகனாரின் ரமண செய்தி ஒரு கோணத்தில் சாதகர்களிடம் ஆத்ம ஸ்புரணத்தைத் தட்டி எழுப்புகிறது. மறுகோணத்தில் அதே ரமண செய்தி அகங்காரத்தை ஓட்டி விடுகிறது.

நீயார் அவன்யார் எனப்புறத்து நீளமனம்
போயே வினாவும் அப்போக்கு ஒழிந்தே - ஓயாது
தான் ஆவலாகத் தனைக்குறித்துத் தன்அகத்து
நான்ஆர் எனக் கேட்கை நன்று.

(குருவாசகக்கோவை - ஆன்மவிசாரத்திறன்)

பொருள்: "நீ யார், அவன் யார் என்று வெளியே சென்று ஆராய முற்படும் சிதறிய மனமானது, அப்படி வெளியில் பொருட்களை ஆராய்வதை விட்டுவிட்டு ஆவலோடு நான் யார் என்று தன்னை விசாரித்து அறிய முற்பட்டால் அதுவே மிகச் சிறந்த நன்மையாகிறது."

ஜீவனுக்கு இரண்டு அவஸ்தைகள் இருக்கின்றன.

1. சம்சாரி அவஸ்தை (குறைநிலை)

2. அசம்சாரி அவஸ்தை (நிறைநிலை)

ஜாக்ரத் மற்றும் ஸ்வப்ன அவஸ்தைகளில் அதாவது விழிப்பு, மற்றும் கனவு நிலைகளில் ஜீவனானவன் இன்ப, துன்பங்களை மாறிமாறி அனுபவிக்கும் சம்சாரியாக இருக்கிறான். ஆழ்ந்த உறக்கம் என்கிற சுசுப்தி அவஸ்தைகளில் இன்ப, துன்பங்களற்று ஆனந்தமாக அதாவது நிம்மதியாக

இருக்கிறான். "மோக்ஷ சாயா சுச்தௌ அனுபூயதே" - மோக்ஷத்தினுடைய நிழல் 'தூக்கம்' என்று கூறப்படுகிறது. ஆழ்ந்த உறக்கத்தில் ஜீவனானவன் பிரம்மத்தில் அல்லது ஈச்வரனிடத்தில் தங்கியிருக்கிறான் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆகவே ஜீவனை பிரகரணமாக (Subject matter) எடுத்துக்கொண்டு விசாரிக்கும்படி உபநிஷத்துகள் கூறுகின்றன. காரணம் பந்த மோக்ஷங்களாகிய பிரச்சனையும், தீர்வும் ஜீவனாகிய 'நான்'-ல் மட்டுமே ஒளிந்திருக்கின்றன. ஜகத்திலோ, ஈச்வரனிடத்திலோ செய்வதற்கு ஒன்றுமில்லை.

பிருஹதாரண்யஹ உபநிஷத்தில் ஜீவனுக்கு 'ஸத்யஸ்ய ஸத்யம்' என்ற ஒரு லக்ஷணம் தரப்படுகிறது. அரசனின் மகனை இளவரசன் என்று அழைப்பதைப்போல, சாஸ்த்திரம் ஜீவனை 'ஸத்யஸ்ய ஸத்யம்' அதாவது 'உண்மையினுடைய உண்மை' என்று அழைக்கிறது. உண்மை என்றால் 'இருத்தல்' (Existence) என்று பொருள். ஆகவே உண்மையினுடைய உண்மை என்றால் இருப்பவைகள் அனைத்திற்கும் ஆதாரமாக இருப்பது என்று பொருள்படுகிறது. சாஸ்திரம் தருகிற லக்ஷணத்திற்கு சமமாக ஜீவனுக்கு முருகனார் தரும் லக்ஷணம் 'நீளமனம்'.

ஜீவ, ஈச்வர, ஜகத்தாக இருப்பவைகளுக்கு ஆதாரமாக எந்த பிரம்மம் இருக்கிறதோ அதுவே ஆத்மன் அதாவது நீ என்று அறி என்று உபநிஷத் கூறுகிறது. உபநிஷத்தினுடைய போதனையை பகவான் ரமணர் மிக எளிதாக்கித் தருகிறார். முருகனாரோ பகவான் ரமணரின் உபதேசத்தையும் இன்னும் சுலபமாக்கி சாதகர்களின் சுமையைக் குறைக்கிறார்.

லக்ஷியத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். மாறாக உன்னைத் தகுதிப்படுத்துவதில் கவனத்தைக்

குவி. லக்ஷியம் எளிதில் கையகப்படும் என்கிறார் முருகனார். நீ யார், அவன் யார் என்று உலகங்களையும், ஈஸ்வரர்களையும் நாடி வெளியில் ஓடும் மனப் போக்கை நிறுத்தி, பெரும் ஆவலோடு தன்னை நான் யார் என்று விசாரிப்பதே பெரும் நன்மையை அதாவது ஆனந்தத்தை நல்கும் என்பது ரமண தூதர் முருகனாரின் ஆத்ம சூசனா (ஆத்மக் குறிப்பு).

இதைத்தான் கைவல்ய உபநிஷத் கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

ஆத்மானம் அரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணீம்!
ஞானநிர்மதன அப்யாஸாத் பாபம் தஹதி பண்டித:!!

"மனதை கீழ்க்கட்டையாகவும் ஓங்காரத்தை மேல்கட்டையாகவும் கொண்டு விசாரம் என்ற பயிற்சியால் கடைந்து பண்டிதன் பந்தத்தை எரிக்கிறான்."

ஆக, விசாரிக்க வேண்டும். அதுவும் ஜீவனை மட்டுமே விசாரிக்க வேண்டும். ஆத்ம விலாஸம் தெரிந்தால் மட்டுமே போதாது. அஹங்காரத்தினுடைய விலாஸமும் தெரிந்திருக்க வேண்டும். இராவணன் போன்ற அகங்காரத்தை அழிக்க வேண்டும். காரணம் ஆத்மனை சிதாபாஸனாக்கி (சித்+ஆபாஸம் = அறிவின் பொய்யுருவம்), அதை ஸம்சாரியாக்கியது இந்த அகங்காரம்தான். ஆகவேதான் பகவான் ரமணரின் ஞானபானமானது உண்மை நாடும் சாதகர்களின் அகங்காரத்தை துளைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறது. ரமண தூதர் முருகனாரின் தத்துவ செய்தியும் அகங்காரத்தை நிர்மூலம் செய்யும் விதத்திலேயே அமைந்துள்ளது.

ஜீவன் அனுபவித்துவரும் அகங்காரத்தைக் குறித்த முருகனாரின் பிரகடனம் இதோ:

*கேட்கும் தான்யார்எனும் கேள்வியால் கேடுஉறுவே*
*கேட்கப் படும்துவிதத்க் கேள்வியெலாம் - கேட்கும்*
*தான்ஆர் எனும் அக்கேள்வி பிரமாத்திரமாய்க்*
*கார்அவிச்சை*
*ஆர் அனியத் தோற்றம் அடும்."*

*(குருவாசகக் கோவை, ஞானவிசாரத்திறன்)*

*பொருள்: "கேள்வி கேட்பவர் யார் என்கிற விசாரத்தால் கேள்விகள் உற்பத்தி ஸ்தானத்திலேயே அழிந்து போகின்றன. கேள்வி கேட்கும் தான் யார் எனும் விசாரமே அவித்தையாகிய அந்நியத் தோற்றத்தை அழிக்கும் பிரம்மாஸ்திரமாக விளங்குகிறது."*

ஆத்ம விசாரத்தை பிரம்மாஸ்திரம் என்று கூறுகிறார் முருகனார். காரணம் ஆத்ம விசாரம் ஒன்றே ஜீவ, ஈஸ்வர பேதம், ஜீவ ஜீவ பேதம், ஜீவ ஜகத் பேதம், ஈச்வர ஜகத் பேதம் போன்ற அஞ்ஞான விரிவுகளை விரட்டியடிக்கிறது. காரணம் பேதமே (பிரிவே) துக்கத்திற்குக் காரணம்.

*'கர்த்தனாம் ஜீவபேதம் கழிவதே துக்கம் போதல்'* என்கிறது கைவல்ய நவநீதம். ஒரு அகங்காரத்தை அழிப்பதன் வாயிலாக மற்ற பேதங்கள் முழுவதும் அழிந்து விடுமா என்றால்,

*'சரீரஸ்ய சைதன்யம் அதிஷ்ட்டானம் ஏவ ஜகத: அதிஷ்ட்டானம்'*

"இந்தச் சரீரத்திற்கு அதிஷ்டானமாக, ஆதாரமாக எந்த ஒரு சைதன்யம் இருக்கிறதோ அதே சைதன்யம்தான் இவ்வுலகுக்கே அதிஷ்டானமாக, ஆதாரமாக இருக்கிறது" என்பது வேதாந்தத்தின் துணிபு. ஆகவே கேட்கும் தான் யார் எனும் விசாரமே அவித்தையாகின்ற அந்நியத் தோற்றத்தை அழிக்கும் பிரம்மாஸ்த்ரம் என்கிறார் முருகனார்.

ரமண சந்நிதியில் கேள்வி ஒன்று முன் வைக்கப் பட்டது.

"யோகம் என்றால் ஐக்யமாதல் என்று கூறப்படுகிறது, எது எதனுடன் ஐக்யமாகிறது. பகவான் தெளிவுபடுத்த வேண்டும்."

பகவான் கூறினார்: ஐக்யமென்பது பிரிவை முன்னிட்டே நிகழ்கிறது. யார் எதை விட்டுப் பிரிந்திருக்கிறான்? எதனோடு ஐக்யமாக வேண்டும்? நாமே ஏதோ ஒன்றுடன் ஐக்யமாக விரும்புகிறோம். அவ்வொன்று எதுவென்று நமக்குத் தெரியாது. ஆனால், 'நான் இருக்கிறேன்' என்று உணர்ந்து கொண்டேயிருக்கிறோம். அந்த நான் என்பது எதுவென நன்கு அறிந்து அதுவாக இருத்தலே போதும். ஐக்யமாக விரும்பிய பெரிய பொருள் 'நான்' என்பதன் யதார்த்த சொரூபமே என்று நன்குணர்வோம். எதைவிட்டும் நாம் பிரியவில்லை. ஆதலால் எதனோடும் ஐக்யமாக வேண்டியதுமில்லை. ஆகவே எதனின்றோ பிரிந்திருப்பதாகக் கருதுபவன் யாரென்று பார்ப்பதே யோக ரகசியம்.

*லக்ஷண திருட்டியா அநிர்வசனீயம்!*
*ஞானதிருஷ்டியா அஸத்!!*

மாயை என்றால் இப்படிப்பட்டது என்று இலக்கணம் தர முடியாது. ஆனால் மாயை என்றால் 'முற்றிலும் இல்லாதது' (அஸத்) என்று புரிந்து கொள்ளலாம் என்று சாஸ்திர கோட்பாட்டை எளிமையாக்கித் தருகிறது ரமணரின் வழிகாட்டல். அதை மேலும் செம்மைப்படுத்தித் தருகிறது முருகனாரின் தமிழ் வார்த்தைகள்.

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆனந்தமயம் (அறியாமை) என்ற பஞ்சகோசங்கள் என்கிற மறைப்புகளைக் கடந்து

பரமனைத் தானாக உணர வேண்டியிருக்கிறது. பயணமோ சூக்ஷ்மமானது. பாதையோ நுணுக்கமானது. மேலும் இவையனைத்தும் 'நான்' என்ற ஒரு தத்துவத்தில் புதைந்து கிடைக்கிறது. ஆகவே விசாரம் என்ற அகழ்வாராய்ச்சி தேவைப்படுகிறது.



'ஸஹ வீர்யம் கரவாவஹை' - குருவும், சிஷ்யனும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும் என்று உபநிஷத் கூறுவதைப்போல குரு ரமணரும், சிஷ்யர் ரமண தூதர் முருகனாரும் சேர்ந்து தங்களுடைய முயற்சியை, உழைப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.

இனி நாம் கைக்கொள்ள வேண்டியது: ரமண பக்தியும், புரிந்து கொள்ளலுமே.

# ரிபு கீதை

## தியாகராஜன்

அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபு கீதையில் 26வது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால், அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று பகவான் அருளியுள்ளார்கள். அந்த அத்தியாயத்தின் பாடல்களை, அவை தொடர்பாய் பகவான் அவ்வப்போது அருளியுள்ள விளக்கங்களோடு அடியவர்களுக்கு அர்ப்பணிக்கிறோம்.

எதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை
யெத்துயரு மெள்ளவு மிலாத தாகு
மெதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை
யானீயு மற்றாரு மிலாத தாகு
மெதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை
யிப்பேதம் யாவையுமே யிலாத தாகு
மதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய். 26/27

எதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை
யிருமையறத் தான்றானா யிருக்க லாகு
மெதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை
யெள்ளளவுந் தனக்கயலே யிலாத தாகு
மெதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை
யிணையற்ற வானந்த மொன்றே தோன்று
மதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய். 26/28

[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1- பக்.153 - பதிப்பு 2004] கே: நான் பரிபூரணனாயின் எனக்கேன் அது தெரியவில்லை?

*பக: தூக்கத்தில் எக் குறைபாடும் தோன்றுவதில்லை. அத்தகைய பூரண அஹம் ஸ்வரூபமே நாமாயிருக்க, விழிப்பு நிலையிலே தோன்றும் அகந்தை ஏன் எப்போதும் குறைபட்டுக் கொண்டே இருக்கிறது? அது ஒரு பொய்த் தோற்றமும் போலியுமாதலாலேயே, இல்லாத கற்பனைகளையெல்லாம் செய்துகொண்டு அவற்றினிடையே ஓயாது துன்புறுகின்றது.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2- பக்.32 - பதிப்பு 2000] பக: உலகோ, அதன் துன்பங்களோ தூக்கத்தின்போது உனக்குத் தோன்றினவா? அவ்வாறே நீ உன் உண்மை நிலையில் நின்றால், உலகத் தோற்றமோ துன்பத் தோற்றமோ சற்றும் இறாது. உண்முகப்பட்டு ஏகான்ம சொரூபனாய் நீ நின்றால், உலகத் தோற்றம் சத்தில்லா வெறும் நிழலே என்று உணர்வாய்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2- பக்.61 - பதிப்பு 2000] பக: நமது இருப்பே ஆனந்த மயம். அதனாலேயே அதை மறைக்கின்ற எண்ணக் குழப்பம் அற்றுப் போகும் உறக்கத்தில் நமது இயல்பேயாம் ஆனந்தமாய் இருக்கிறோம். உறக்கத்தில் துக்க நீக்கம் இருக்கிறது என்பதற்கு துக்கம் ஒன்றுமே இல்லை. விழிப்பு நிலையிலுள்ள தேகாத்ம புத்தியே எல்லாக் குழப்பத்திற்கும் மூல காரணம்.*

*கே: எனது இயல்பே ஆனந்தமென்று எனக்கு விளங்க வில்லை. அவ்வனுபவத்தைப் பெற விரும்புகின்றேன்.*

*பக: அனாத்மாவை ஆத்மாவாய்க் கருதும் தவறாலேயே இயல்பாம் ஆனந்தம் மறைபட்டாற் போலத் தோன்றுகிறது. அனாத்மாவும் ஆத்மாவுக்கு அன்னியமாய் இல்லை. எனினும் முதலில் அனாத்மாவை ஆத்மாவாய்க் கருதும் தேகாத்ம புத்தி ஒழிந்தால் அன்றி, நமது இயல்பேயாம் ஆனந்தத்தை உணர முடியாது.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2- பக்.47- பதிப்பு 2000] பக: உங்களை நீங்களே ஏன் குறைவுபடுத்திக் கொள்வது? பரிபூரணமாயிருப்பதுதானே! ஆழ்ந்த உறக்கத்தின்போது குறைபாடு ஏதும் தோன்றியதா? அவ்வாறே, இப்போதும் குறைபாடின்றி இருக்கலாமே! குறைபாடில்லா சுஷுப்தியை விழித்திருக்கும்போதே, இப்போதே உணருங்கள். எல்லாம் சரியாகிவிடும். எல்லா உயிர்களுக்கும் எது நிசியோ (உணரப்படாததாய்த் தொன்றுகிறதோ) அதனில் விழித்திருக்கிறான் யோகி. பேதப் பிரபஞ்சமாம் அதனிடம் பாமரர் விழித்திருக்கின்றனரோ அங்கே அவன் துயில்கிறான் (பேதம் யாதும் காணாதிருக்கிறான்) என்னும் கீதை இப்பொருள் பற்றியதே.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2- பக்.157,158- பதிப்பு 2000] கே: உலகம் எண்ணமாத்திரம் என்பதெப்படி? மனத்தின் இயக்கமே எண்ணம். அம்மனத்தின் ஸ்தானம் மூளை. மூளை மனிதனது மண்டையோட்டிற்குள் இருப்பது. அதற்குள் அகிலமெல்லாம் எப்படியடங்கும்?*

*பக: மனமென்பது மூளைக்குள் இருப்பதாக எண்ணும் மட்டும் இத்தகைய சந்தேகம் உண்டாவது இயல்பே. ஆனால் மனமென்பது என்னவென்று பார்ப்போம். தூக்கத்திலிருந்து விழித்ததும் அதுவரை காணப்படாத உலகம் காணப்படுகிறது. பஞ்ச இந்திரியங்களின் விஷய சமூகமே உலகம். அவையாவும் மனோமயமே. பூத ஆகாசம் மனஆகாயத்திலும், மன ஆகாயம் சிதாகாசத்திலும் அடங்கும். மனத்தின் சத்வாம்சம் மன ஆகாயமாம். அதன் ராஜச அம்சம் காண்பானாம்; தாமச அம்சம் காட்சியாம். இவ்வாறு காண்பான் - காட்சிமயமாம் உலகு அனைத்தும் மனோமயமே என்று உணரலாம். ஒரு அறைக்குள் தூங்கிக் கொண்டிருக்கும் ஒருவன்*

*கனாக் காண்கிறான். விஸ்தாரமான உலகையும் அதன் விவகாரங்கள் பலவற்றையும் அப்போதே கற்பிதமான ஒரு சரீரத்தோடு அவன் அனுபவிக்கின்றான். அவை யாவும் அவனுக்கு வெளியிலா இருக்கின்றன? அவன் மனமே அத்தனை வடிவங்களாக விரிந்துள்ளதன்றோ? அவ்வறேதான் நனவுடலும், அதன் உலக அனுபவங்களும் மனத்தின் விரிவேயன்றி வேறன்று.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2- பக்.260- பதிப்பு 2000] சமாதியிலோ தூக்கத்திலோ உலகம் தோன்றாது. இந்த ஒளியிலோ கன இருட்டிலோ மயக்கத்திற்கு இடமில்லை. மங்கிய ஒளியிலேயே கயிறு பாம்பாகத்தோன்றக்கூடும். அவ்வாறே 'சுத்த சித்' கேவல ஞானப் பிரகாச மாத்திரமாகவே இருக்கும். அதனின்று எழும் அகந்தையே உடலாகவும் உலகாகவும் விரிகிறது. தூக்கத்தினின்று விழிக்கும் போது ஒருகணம் கேவலப் பிரகாசமாத்திரமாய் இருக்கிறது. அதனின்று அகந்தை எழுந்தபிறகே தேகாதி திருசியப் பிரபஞ்சம் அனைத்தும் தோன்றுகிறது. பாஹ்ய விஷயங்களுக்கிடமாம் பௌதிக ஆகாசம் மன ஆகாயத்திலும்; மன ஆகாயம் சிதாகாசத்திலும் அடங்கும். காண்பான், காட்சி, காண்பொருள்களாகப் பாகுபட்டுத் தோன்றுவது கேவலப் பிரகாச மாத்திரம், அதனில் அன்னியம் எதற்கும் இடமே இல்லை. மூல நாட்டத்தால் அகந்தை மனம் அதில் கரைந்தொழிந்தால், அகண்டான்ம அனுபூதி தடையின்றி இடையறாது ஒளிரும்.*

*மஹர்ஷி வாய்மொழி - பக்.23 - பதிப்பு2004 பக: ஆத்மாவை அநாத்மாவோடு ஒன்றுபடுத்தும் போதே துவைதம் இருக்கும். ஒன்று படுத்தாமையே அத்வைதம்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2- பக்.146- பதிப்பு 2000] பக: இருப்பு, இன்மை (சத் - அசத்) என்னும் இருபான்மைகளையும் கடந்திலகும் அதே*

*சத்தெனப்படும். அவ்வாறே (சித் - அசித்) அறிவு, அறியாமை என்னும் இருபான்மைகளும் அற்றதே சித் எனப்படும். அங்கனமே சுக துக்கத் தொடர்பிலதாம் சொரூபமே ஆனந்தமெனப்படும்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1- பக்.230, 70- பதிப்பு 2004] தூக்கத்திலுள்ளது அத்வைத நிலையே. ஜீவாத்ம பரமாத்ம பேதம் ஏதாவது அங்கே தோன்றுகிறதா? பேதம் அனைத்தையும் மறந்த நிலையே தூக்கம். அதுவே சுக நிலை. அவ் ஆனந்த நிலையில் அமர்வதற்காகவே, மெத்தை, தலையணை, கொசுவலை முதலியவற்றை எவ்வளவு கருத்துடன் ஒழுங்குபடுத்திக் கொளகின்றோம்! இவ்வளவும் விழிப்பு நிலைமையின் கவலைகளில் இன்று விடுபடுவதற்காகவே. ஆயினும் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டால், புறத்துணைகள் பயனற்றுப் போகின்றன. இதனால் விளங்குவது என்ன? அறிவெனப்படும் அறியாமையினின்று விடுபடுவதற்கே முயற்சிகள் அனைத்தும்; பிறகு அவற்றால் ஆகவேண்டியதொன்றும் இல்லை என்பதே.*

*பக: தனதியலே ஆகிய நான் என்னும் ஆத்மா இதுவாகவோ அதுவாகவோ இருப்பதன்று. கேவல சன் மாத்திரமே நான். இருப்பே நாம். அஞ்ஞானமென்று யாதொன்றும் இல்லை. இது புறியவில்லை எனில் அவ் அறியாமை யாருக்கென்று பார்க்க வேண்டும். தூக்கத்தினின்று விழிக்கும்போதே அகந்தை தோன்றுகிறது. நான் இப்போது தூங்கிக்கொண்டிருக்கிறேன், இனி விழிக்கப் போகிறேன் அல்லது வெகு நேரம் தூங்கிக்கொண்டே இருக்கிறேன் என்றெல்லாம் தூக்கத்தின்போது நமக்குத் தோன்றுவதில்லை. விழித்த பிறகே நன்றாய்த் தூங்கினேன் என்று நினைக்கிறோம் - சொல்கிறோம். விழித்துக்கொண்டதாக நாம் நினைக்கும்போது தூங்கிக்*

*கொண்டுதான் இருக்கிறோம். அத் தூக்கம் தெளிய, கேவல சன் மாத்திரமாம் நம்மை நாம் உணர வேண்டும். உடலுரு உணர்வோடு கலக்க வேண்டாம். உடலென்பது வெறும் நினைப்புப் பிண்டமே. ஞான நிலையில், எந்த நினைப்பு வந்தாலும் போனாலும் அது நம்மைச் சற்றும் தொடராது. தூங்கும்போது உடல் என்றோ உலகென்றோ எந் நினைப்புமில்லை, கவலையுமில்லை. அப்படியே எப்போதும் இருக்கலாமே!*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2- பக்.291 பதிப்பு 2000] தூக்கத்தில் ஸ்வரூபப் பிரஜ்ஞை தொடர்ந்திருந்த போதிலும் அது அஞ்ஞான மறைப்பைப் போக்குவதில்லை. (அகண்டாகார) விருத்தி ஞானமே அஞ்ஞானத்தை ஒழிக்கும். சாதாரண வெய்யிலில் தீ உண்டாகாது. பூதக் கண்ணாடி மூலம் ஏகாக்ரமாகும் ஒளியிலேயே தீயுண்டாகும்; அதன் கீழேயுள்ளதை எரித்துவிடும். அவ்வாறே ஸ்வரூப ஞானம், அஞ்ஞானத்தைப் போக்காது. தியானத்தால் அதி சூஷ்மமான அகண்டாகார விருத்தியே அஞ்ஞானத்தை அறவே அகற்றும். "அனைத்தின் சாஷியாய்த் தானே துலங்கும் இவ் ஆத்ம ஸ்வரூபத்தைத் தூல புத்தி கொண்டு அறிய முடியாது. சமாதியில் அத்யந்த சூம் விருத்தியினால் மிக நிர்மல புத்தியினர் ததாகாரமாய்த் தன்னை உணர வேண்டும்" என்று பொருள் விவேக சூடாமணியிற் கூறப் பெற்றுள்ளது.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1- பக்.43 - பதிப்பு 2004] ப்ரம்மஸ்வரூபமே பரமானந்தம். அவ்வகண்டாத்மாவே சாந்திமயம். உணர்வே உருவாயுள்ளது அதுவே; ஞான விசாரத்தின் முடிவிதுவே; பக்தி நிலையின் முடிவும் இதுவே. அமைதியையும் ஆனந்தத்தையும் ஈசனை அச்ரயித்து அவனருளாற் பெறுகின்றோம். ஆனந்தத்தை அருள்பவன் அகண்டானந்த மயனாய் இருத்தல்*

*வேண்டும். ஸ்ர்வ சக்த்தனாம் அவ் ஆனந்தமயனையே சகுணப் பிரம்மம் அல்லது ஈசன் என வழங்குகின்றோம்.*

*நிர்குணப் பிரம்மமோ கேவல ஆனந்த மயம். பிரம்ம ஸ்வரூபத்தினின்று ஈசன் வாயிலாய் இருப்பைப் பெறும் ஜீவர்களும், யதார்த்தத்தில் ஆனந்த இயல்பினரே. ஆனந்தமில்லாவிடில், ஜீவர்களின் இருப்பே, வளர்ச்சியோ, பெருக்கமோ ஒன்றுமே நிகழாது. "பரந்த இவ் ஆனந்தமில்லா விடில், எவனே உயிர் தரித்திருக்க முடியும்?" (தைத்திரீய உபனிஷத்)*

*[நான் யார்- பக்.8- பதிப்பு 2008] ஈசன் பேரில் எவ்வளவு பாரத்தைப் போட்டாலும், அவ்வளவையும் அவர் வகித்துக் கொள்ளுகிறார். சகல காரியங்களையும் ஒரு பரமேச்வர சக்தி நடத்திக் கொண்டிருக்கிறபடியால், நாமும் அகற்கு அடங்கியிராமல், 'இப்படிச் செய்ய வேண்டும், அப்படிச் செய்ய வேண்டும்' என்று சதா சிந்திப்பதேன்? புகை வண்டி சகல பாரங்களையும் தாங்கிக் கொண்டு போவது தெரிந்து இருந்தும் அதிலேறிக் கொண்டு போகும் நாம் நம்முடைய சிறிய மூட்டையையும் அதிற் போட்டுவிட்டுச் சுகமாயிராமல், அதை நமது தலையிற் தாங்கிக்கொண்டு ஏன் கஷ்டப்பட வேண்டும்?*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2015

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *மே* | 03 | *ஞாயிறு* | *காலை* 9.39 | 04 | *திங்கள்* | *காலை* 9.20 |
| *ஜுன்* | 01 | *திங்கள்* | *இரவு* 10.11 | 02 | *செவ்வாய்* | *இரவு* 9.52 |
| *ஜுலை* | 01 | *புதன்* | *காலை* 10.44 | 02 | *வியாழன்* | *காலை* 6.46 |
| *ஜுலை* | 30 | *வியாழன்* | *இரவு* 7.38 | 31 | *வெள்ளி* | *மாலை* 3.40 |

# பகவான் ரமணர் கண்ட தமிழ் வேதாந்த நூல்கள்

அடுத்ததாகத் தாயுமானார் பாடல்களைச் சிறிது ஆராய வேண்டும். இந்தப் பெரியார் 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். சிலகாலம் திருச்சி நாயக்கர் மன்னனிடம் அரச கணக்கராகப் பணிபுரிந்தார். இது அரசனுக்கு அடுத்ததாகச் செல்வாக்கு மிகுந்த நிலை. இதில் இருந்து பல ஆண்டுகள் எல்லா வகையான வசதிகளையும் அனுபவித்த தாயுமானால் தமது முப்பதாவது வயதில் துறவு மேற்கொண்டு கோவணம் ஒன்றையே அணிந்து பிட்சை எடுத்துண்டு அதே திருச்சி நகரில் வாழ்ந்தார். இந்த வாழ்க்கை முறையிலும் அவர் பாடிய பாடல்களிலும் ஒரு சிறிதுகூட ஆணவம் என்ற தன்மையைக் காணவே முடியாது. இறைவனைக் கண்டவர் என்ற நிலையை மெய்யாகவே எடுத்துக் காட்டுவதாகும் இந்த மனப்பண்பு. அவர் பாடல்களும் அவரது பக்குவ நிலையைத் தெளியக் காட்டுவன ஆகும்.

தாயுமானார் தன் மனத்தில் எழுந்த உணர்வுகளைப் பாடல் வடிவத்தில் வடித்தனர்; அத்துவித சாத்திரத்தை மாணவர்க்குக் கற்பிக்கும் நோக்கத்தோடு தாண்டவமூர்த்தி கைவல்ய நவநீதம் இயற்றியதுபோல் அல்லாது இப்பாடல்கள் பக்குவம் பெற்ற ஒரு பெரியாரின் மனப்பாங்கினைக் காட்டுவனவாக அமைந்தன. தமிழ்நாட்டில் படிப்பறிவில்லாத மக்களின் பேச்சிலும் இவரது பாடல்களின் சில வரிகள் பிறழ்ந்து வருவன. இவரைப் பற்றி அறியாதவரே இந்நாட்டில் இருக்க முடியாது. ஆகவே சாத்திரத்தைப் படிப்படியாகக் கற்பிக்காவிடினும் இவரது பாடல்களில் சில பகுதிகளை

இங்குச் சுவைத்து நம் நாவினையும் மனத்தினையும் தூயனவாக்குவோம்.



*கல்லால் எறிந்தும் கை வில்லால் அடித்தும் கனி மதுரச்*
*சொல்லால் துதித்தும் நற் பச்சிலை தூவியும் தொண்டர் இனம்*
*எல்லாம் பிழைத்தனர் அன்பற்ற நான் இனி ஏது செய்வேன்!*
*கொல்லா விரதியர் நேர் நின்ற முக்கட் குரு மணியே!*

என்று பக்குவம் பெற்றும் அடக்கத் தன்மையால் பெறாதார் போலப் பாடுவார். அடுத்து,

*கண்டேன் நினதருள் அவ்வரு ளாய்நின்று காண்பதெல்லாம்*
*உண்டே யதுவும் நினதாக்கி னேன்உவட் டாதஇன்பம்*
*மொண்டே அருந்தி இளைப்பாறி னேன்நல்ல முத்திபெற்றுக்*
*கொண்டேன் பராபர மேயெனக் கேதுங் குறைவில்லையே.*

என்று தான் முக்தி பெற்றதையும் கூறி "ஏதும் குறைவு இல்லையே" என்று தன் மெய்யான நிலையைக் காட்டிப் பாடுவார்.

கல்லாலின் நீழல்தனில் ஒருநால் வர்க்குங்
கடவுள்நீ உணர்த்துவதுங் கைகாட் டென்றால்
சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந் தன்மை
துரும்புபற்றிக் கடல்கடக்குந் துணிபே யன்றோ.

என்று சின்முத்திரையால் ஈசன் சனகாதி முனிவர்க்குத் தத்துவம் போதித்தமையை அழகிய ஒரு பாடலால் காட்டுவார். அதே பாடல் வரிசையில்

நெறிபார்க்கின் நின்னையன்றி அகிலம் வேறோ
நிலநீர்தீக் கால்வானும் நீய லாத
குறியாதும் இல்லையென்றால் யாங்கள் வேறோ
கோதையொரு கூறுடையாய் கூறாய் கூறாய்.

என்று அத்துவிதத் தத்துவமாகிய அஹம் பிரம்மாஸ்மி என்றதனை அழகாக எளிய முறையில் இங்கு விளக்கிக் காட்டுவார்.

இன்று சமயப் பிணக்கு மனித இனத்தையே அழித்து விடுமோ என்று அஞ்சத்தக்க பேய்க்கோலம் பூண்டு தலைவிரித்தாடுகிறது. இந்நிலையில் தாயுமானாரின் பரந்து விரிந்த அன்புள்ளத்திலே பிறந்த பாடல் இந்நோய்க்கு உறுமருந்தாகும்.

வேறுபடும் சமயமெல்லாம் புகுந்துபார்க்கின்
விளங்குபரம்பொருளேநின் விளையாட்டல்லால்.
மாறுபடுங்கருத்தில்லை முடிவின்மோன
வாரிதியினதித்திரள்டோல் வயங்கிற்றம்மா.

இந்தப் பாடலைப் பகவான் ஒரு பக்தரிடம் வேதாந்த தத்துவம் பற்றி விளக்குகையில் மேற்கோளாகக் காட்டினார். இன்னொரு சமயம் பகவான், சிலர் ஒரு குளத்தில் புகையிலைத் தண்டுகளைப் போட்டு மீன்களைக் கொன்று அவை தண்ணீரின் மேல் மிதக்கும்போது அவற்றைத் திரட்டிச் சென்றதைப்

பார்த்திருப்பதாகச் சொல்லித் தாயுமானார் பாடலைக் கூறினார்.

உள்ளத்தி னுள்ளே ஒளித்தென்னை ஆட்டுகின்ற
கள்ளக் கருணையையான் காணுந் தரமாமோ
வெள்ளத்தை மாற்றி விடக்குண்பார் நஞ்சூட்டும்
பள்ளத்தின் மீன்போற் பதைத்தேன் பராபரமே.
(விடக்கு உண்பார் - மாமிசம் உண்பவர்)

பகவானுக்குத் தாயுமானார் பாடல்கள் முழுதும் அறிமுகமானவையே; இந்தச் சம்பவத்தில் அவர் தாயுமானார் பாட்டின் பின்பகுதியில் உதாரணமாக வரும் வரிகளைப் பொருத்தமாக மேற்கோள் காட்டியதிலிருந்து இதனை அறிந்துகொள்கிறோம்.

'திடம் உறவே' என்ற தலைப்பில் வரும் மேற்சொன்ன பாட்டினைப்போல் பல பாடல்களில் தன் நிலையை உளம் உருகும்படி பாடுவார் இறையன்பர்.

ஆராமை கண்டுஇங்கு அருள்குருவாய் நீஒருகால்
வாராயோ? வந்து வருத்தம்எல்லாம் தீராயோ?

என்றும்

விண்ஆறு வெறப்பின் விழுந்தாங்கு என்மார்பில்
கண்ஆறு பாய்ச்சிடும்என் காதல்வெள்ளம் கண்டிலையோ

என்றும்

கூடியநின் சீர்அடியார் கூட்டம்என்றோ வாய்க்கும்என
வாடியஎன் நெஞ்சம்முக வாட்டமும்நீ கண்டிலையோ

என்றும் பாடுவதைக் கேட்டு நெஞ்சுருக வேண்டும்.

இவற்றோடு, 'சுகவாரி' என்ற தலைப்பில் உள்ள பாடல்களில் கடைசிப் பாட்டையும் 'மண்டலத்தின்' என்ற மகுடமிட்ட பாடல்களில் கடைசி நான்கினையும் பகவான் ஒரு பக்தருக்கு விளக்கிக் கூறினார். தாயுமானார் பாடல்களில் பகவானுக்கு இருந்த ஈடுபாடு சொல்லத் தரமன்று.

(தொடரும்)

# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### ஸ்ரீ வித்யா ஹோமம்

*ஸ்ரீ ரமணாச்ரமத்தில் வழக்கம்போல் இவ்வாண்டும் ஸ்ரீவித்யா ஹோமம் மார்ச் 20 வெள்ளிக்கிழமை அன்று வெகுசிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. காலை 7 மணிக்கு பூஜை தொடங்கப்பெற்று பின்னர் 8 மணியிலிருந்து 11 மணிவரை நவவாரண பூஜை நடைபெற்றது. 11 மணியளவில் ஹோமம் தொடங்கி, மதியம் 2.15 மணிக்கு பூர்ணாஹுதியும் தீபாராதனையும் நடந்தேறியது. பின்பு 2.45 மணிக்கு கலச நீர் பகவான் மற்றும் மாத்ருபூதேஸ்வரர் லிங்கத்திற்கு அபிஷேகம் செய்யப்பட்டது. பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டு திரிபுரசுந்தரி அம்பாளின் அருளைப் பெற்றனர்.*

## ரமண கேந்திரா செய்திகள்

### ஸ்ரீ சுமுக விநாயகர் திருக்கோயில், முடிச்சூர், சென்னை

அருணாசல அக்ஷரமணமாலை பாராயண விழா

*அக்ஷரமணமாலை நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு ஸ்ரீ சுமுக விநாயகர் திருக்கோயில், மதனபுரம், முடிச்சூர், சென்னையில் 31-1-2015 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நகர்வாழ் பக்த மெய்யன்பர்கள் அனைவரும் கலந்துகொள்ள அக்ஷரமணமாலை கூட்டுப் பாராயணம் நடைபெற்றது. அனைவருக்கும் அக்ஷரமணமாலை புத்தகம் மற்றும் ரமணர் படம் வழங்கப்பட்டு மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது. இவ்விழா திரு.* K. *முரளி அவர்கள் வரவேற்புரை வழங்க திரு* A. *பாலசுப்ரமணியன் தலைமையில் திரு.* P. *தாமோதரன், தலைவர், முடிச்சூர் முதல்நிலை ஊராட்சி, திரு.* A. *வினாயகமூர்த்தி, 3வது வார்டு உறுப்பினர், மற்றும் திரு.* A. *குமார் ராஜா, ரமணாலயம், குரோம்பேட்டை ஆகியோர் சிறப்புரையாற்ற திரு.* S. *குணசேகரன் அவர்கள் நன்றியுரை நவின்றார்.*

## ரமண கேந்திரா, மைலாப்பூர், சென்னை

ஸ்ரீ பகவான் 65வது ஆராதனை விழா
மற்றும் பாராட்டு விழா

*பகவான் ரமண மகரிஷிகளின் 65வது ஆராதனை விழா மற்றும் டாக்டர் டேவிட் ஃப்ராலி,* Director, American Institute of Vedic Studies *& திரு.என். கோபால்சாமி, முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர்,* Chairman, Kalakshetra Foundation, *ஆகியோருக்கு பத்மபூஷண் விருது வழங்கப் பெற்றமைக்கு பாராட்டு விழா 8-3-2015 ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை தத்வலோக ஆடிட்டோரியத்தில் சிறப்பாக நடைபெற்றது. திரு. ராம் மோஹன் அவர்கள் வரவேற்புரை அளிக்க திரு. இசைக்கவி ரமணன், கிரேஸி மோகன், பத்மபூஷண் டாக்டர். பத்மா சுப்ரமணியம், திரு. கல்யாணராமன், டாக்டர் ஜான் கிரைம்ஸ், திரு. என். கோபால்சாமி, டாக்டர் டேவிட் ப்ராலி மற்றும் யோகினி சாம்பவி ஆகியோர் பங்கேற்று உரையாற்றினார்கள்.*

*விழா மாலை 3 மணிக்குத் துவங்கி இரவு 7.30 வரை சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவில் பலதரப்பட்ட பக்தர்கள் திரளாகக் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.*

# பகவான் 65ஆவது ஆராதனை விழா நிகழ்ச்சிகள்

## ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை

*திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் ஸ்ரீ பகவானது 65ஆவது ஆராதனை விழா இவ்வாண்டு ஏப்ரல் 16ஆம் தேதி சிறப்பாக நடைபெற இருக்கிறது.*

*16ஆம் தேதி காலை மஹன்யாச ருத்ராபிஷேகத்துடன், ஸ்ரீ பகவானது சமாதி லிங்கத்திற்கு சிறப்பு பூஜைகள், அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.*

*மதியம் 11.30 மணிக்கு கலந்துகொள்ளும் அனைவருக்கும் சிறப்பு விருந்து.*

## ரமண கேந்திரா, மைலாப்பூர், சென்னை

*16-4-2015 வியாழன் அன்று மைலாப்பூர் ரமண கேந்திரத்தில் காலை 7 மணியிலிருந்து இரவு 8 மணி வரை சிறப்பு நிகழ்வுகள் நடைபெறும்.*

*காலை ஏகாதஸ ருத்ராபிஷேகம், சஹஸ்ரநாம பூஜை, அக்ஷரமணமாலை மற்றும் உள்ளது நாற்பது பாராயணம். மதியம் சிறப்பு விருந்து.*

*மாலை பிரதோஷ பூஜைக்குப் பின்னர் திருமதி. சியாமளா ராமச்சந்திரன் அவர்களின் 'ரமண கதா'. இரவு மைலாப்பூர் மாடவீதிகளில் ரமண திருவுருவப் படம் தாங்கிய தேர் வீதியுலா.*

## ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை

*ஸ்ரீ ரமணாச்ரத்தைச் சார்ந்த சென்னை ரமணாலயம், குரோம்பேட்டையில் 16-4-2015 அன்று ஆராதனை விழா நடைபெற உள்ளது. காலை வேதபாராயணம், ரமண அஷ்டோத்தர பூஜையுடன் விழாத் துவக்கம். கலை நிகழ்வுகள் பழம்பெரும் பகவானது சீரிய அடியாரான கே.கே. நம்பியார் அவர்களின் கொள்ளுப்பேத்திகள் குமாரி. சாஜனா மற்றும் குமாரி சரண்யா அவர்களின் பரதநாட்டியம். சிட்லபாக்கம் ராதாகிருஷ்ண மண்டலி, திருமதி. அபிராமி குழுவினர் ஸ்ரீ ரமண சந்நிதிமுறை பண் இசையுடன் பாடல், அக்ஷரமணமாலை, ரமண சத்குரு பாராயணத்துடன் மதியம் 11.30-க்கு சிறப்பு விருந்து.*

## ஸ்ரீ ரமண சத்சங், நங்கைநல்லூர் , சென்னை

*ஏப்ரல் 19, ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ வரசித்தி விநாயகர் பிரவசன மண்டபம், இந்து காலனியில் மாலை 5.30 முதல் இரவு 7 வரை ஸ்ரீ பகவானது 65ஆவது ஆராதனை விழா நடைபெற உள்ளது.*

*அக்ஷரமணமாலை பாராயணம் மற்றும் திரு. ஆ. சிதம்பர குற்றாலம் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெற உள்ளது.*

## ஸ்ரீ ரமண ஸமாஜம், சூளைமேடு, சென்னை

*ஏப்ரல் 12, 2015 ஞாயிறன்று காலை 8.00 ஸ்ரீ ரமண சஹஸ்ரநாம அர்ச்சனை.*

*16-4-2015 வியாழன் அன்று காலை 5 மணி முதல் சிறப்புப் பூஜைகள், அஷ்டோத்தர, சஹஸ்ரநாம அர்ச்சனை, மற்றும் அக்ஷரமணமாலை பாராயணம். மதியம் 11.30 மணியளவில் சிறப்பு விருந்து.*

*ஏப்ரல் 17 & 19 தேதிகளில் இரவு 6.30 மணியளவில் திருவாசக செந்நாவலர் திரு. சத்குருநாத ஓதுவார் அவர்களின் 'ஸ்ரீரமண சந்நிதிமுறை' பண் இசைப்பாடல்.*

*26-4-2015 அன்று 'ஸ்ரீ ரமண நூல்திரட்டு' பாராயணம்*

*3-5-2015 அன்று சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் இயற்றிய ரமண பக்திப் பாடல்கள் பாராயணம்*

## ஸ்ரீ ரமண சத்சங்கம், மேற்கு மாம்பலம், சென்னை

*14-4-2015 அன்று ஸ்ரீ ரமண மகரிஷிகள் ஆராதனையை முன்னிட்டு ஸ்ரீ ரமண திருவுருவப் பட திருவீதி உலா மாலை 6 மணியளவில் ருக்மிணி தெரு, மேற்கு மாம்பலத்தில் தொடங்க உள்ளது.*

## முருகனார் மந்திரம், ராமநாதபுரம்

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 65வது ஆராதனை விழா 16-4-2015 காலை பள்ளிச் சிறார்கள் அக்ஷரமணமாலை பாராயணத்துடன் தொடங்கி, சிறப்புப் பூஜை மற்றும் மதியம் சிறப்பு விருந்து நடைபெற உள்ளது.*

## திரு. பச்சையப்பன்

*ஸ்ரீ ரமணாச்ரத்தின் குரங்குத் தோட்ட வளாகத்தில் பணியாற்றி வந்த பழந்தொண்டர் திரு. பச்சையப்பன் அவர்கள், 23-12-2014 அன்று குரங்குத் தோட்ட வளாகத்தில் பகவான் திருவடி அடைந்தார். திரு. பச்சையப்பன் 1941 ஆம் வருடம் தனது 16வது வயதில் ஸ்ரீ பகவானிடம் வந்தடைந்தார். 1947ஆம் ஆண்டு தாயார் சமாதியில் வேலை செய்கையில் மேலிருந்து கீழே விழுந்ததால் அவரது காதுகள் கேட்கும் திறனை இழந்துவிட்ட போதிலும் இது அவரை பகவான் பணிக்கு எவ்வகையிலும் குறையாக உணர்ந்ததில்லை. முன்னாள் ரமணாச்ரம தலைவர் திரு. டி.என். வேங்கடராமன் மற்றும் அவரது துணைவியார் நாகலட்சுமி அவர்கள் இவர்பால் மிகவும் பரிவு காட்டினர். இவரும் பகவான் குடும்பத்தினர்மீது மிகவும் மரியாதையும் பக்தியும் பேரன்பும் கொண்டிருந்தார்.*



*இவரது தந்தையார் திரு. கிருஷ்ண கோனார் அவர்கள் பல்லாண்டுகள் பகவான் காலத்தில் கந்தாச்ரமத்தில் பணியாற்றி வந்தவர். பகவானின் தாயாரது பூதவுடலை கந்தாச்ரமத்திலிருந்து மலையடிவாரத்திற்கு சுமந்து வந்தவர்களுள் கிருஷ்ண கோனார் அவர்களும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

## திருமதி. முருகைய பங்கஜாக்ஷி அம்மாள்

*பகவானது பக்தரான திரு. சோமசுந்தரம் பிள்ளை அவர்களின் மகள் முருகைய பங்கஜாக்ஷி அம்மாள் கடலூரில் 1922ஆம் ஆண்டு பிறந்தார். அவரது மாமா அவருக்கு பகவான் திருக்கரம் பட்ட ஒரு பகவான் திருவுருவப் படத்தையும் ரமண நூல்திரட்டு புத்தகத்தையும் அளித்தார். இவை பங்கஜாக்ஷி அம்மாளை உடனே பகவான்பால் ஈர்த்து பக்தராக்கியது.*

*1939ஆம் ஆண்டு பகவான் சந்நிதிக்கு வந்து தரிசித்தார். 1945ஆம் ஆண்டு தனது கணவர் மற்றும் குழந்தைகளுடன் ஆச்ரமத்திற்கு அருகில் குடியேறினார். பங்கஜாக்ஷி அம்மாள் பகவான்மீது பல பாடல்களை இயற்றியுள்ளார். அவை இன்றும் பக்தர்களால் ரமண சந்நிதியில் பாடப்படுகின்றன. அவரது 'செந்தில்முறை' மற்றும் குஞ்சு சுவாமியின் பகவானுடனான நினைவுகளின் தொகுப்பான 'எனது நினைவுகள்' ஆகியவை தமிழில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. கடந்த 2014 டிசம்பர் 26ஆம் தேதி பங்கஜாக்ஷி அம்மாள் பகவான் திருவடி அடைந்தார்.*

## சுவாமி சத்யானந்தா ('திருச்சுழி' மௌனசுவாமி)

*'மௌனசுவாமி' என்று அழைக்கப்படும் திருச்சுழி சுவாமி சத்யானந்தா அவர்கள் 18-3-2015 அன்று காலை பகவான் பதமடைந்தார். இவர் திருச்சுழியில் பூமிநாதேஸ்வரர் திருக் கோயில் கும்பாபிஷேகம் மற்றும் ரமண ரதயாத்திரை நிகழ்வுகளில் சிறப்புப் பங்காற்றினார். ரமணர் பிறந்த திருச்சுழிக்கு அருகில் உள்ள பள்ளிமடத்தில் ஸ்ரீ ரமண திருக்கோயில் கட்டுவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*



## திருமதி. மீனாட்சி அனந்தசாமி

*சென்னை ரமண கேந்திரத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்த திருமதி. மீனாட்சி அனந்தசாமி அவர்கள் 6-4-2015 அன்று காலை 7.40 மணியளவில் தனது 89வது வயதில் பகவான் திருவடி அடைந்தார். இவர் தற்போதைய ரமண கேந்திர வளாகத்தை நிறுவிய திரு. அனந்தசாமி அவர்களின் துணைவியார் ஆவார். திருமதி. மீனாட்சி அவர்கள் தூத்துக்குடியை அடுத்துள்ள ஆறுமுகமங்கலத்தில் வழக்கறிஞர் குடும்பத்தில் பிறந்தவர். இவரது கணவர் அனந்தசாமி அவர்கள்*

*நாகர்கோவில் பூதபாண்டியைச் சார்ந்தவர். இவரது மூதாதையர்களும் வழக்கறிஞர்களாக இருந்துள்ளனர். திரு. அனந்தசாமி அவர்கள் தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் தலைமைப் பொறுப்பில் பணியாற்றியதுடன் கலை மற்றும் திரையுலகத்தில் பணியாற்றியவர். பகவான்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அக்ஷரமணமாலை சிறப்புரை நூல் இவரால் எழுதப்பட்டு வெளியாகியுள்ளது. பேராசிரியர் சுவாமிநாதன், கே.கே. நம்பியார், திரு. பி.எஸ். ஈஸ்வரன் ஆகியோருடன் சென்னை ரமண இயக்கத்தில் தங்களை இக்குடும்பத்தினர் அர்ப்பணித்துக் கொண்டனர்.*





*திருமதி. மீனாட்சி அனந்தசாமி அவர்களது ஆழ்வார் பேட்டை இல்லத்தில் 1978 முதல் 96வரை சென்னை ரமண சத்சங்கங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இக்காலகட்டத்தில் தனது கணவருக்கு மிகவும் துணையாக இருந்து பக்தர்களை உபசரிப்பதில் பெரும்பங்காற்றியுள்ளார். இவர்களுக்கு மூன்று ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் உள்ளனர். இவர்கள் அனைவருமே ரமண பக்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

*ரமணோதயம் மற்றும் ரமண கேந்திரா டிரஸ்ட், திருமதி மீனாட்சி அனந்தசாமி அவர்களைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், | | |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை, ரமணாலயம்*** | .......... | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| ***புதுச்சேரி*** ரமண கேந்திரம் | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | .......... | 9486576687 |
| ***ஓசூர்*** அசோக்குமார் | .......... | 8643842772 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



20-3-2015 வெள்ளிக்கிழமை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் நடைபெற்ற
ஸ்ரீவித்யா ஹோமக் காட்சிகள்



Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542

